Registered as a Newspaper in Ceylon

** விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்:389

National Tamil Daily

மலர் 10
இதழ் 217
தேசிய தினசரி

சர்வதாரி [illegible] ஆவணி 30 ஜ(ு)லை 21 ஞாயிற்றுக்கிழமை (15-9-68)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
[illegible] டாம் வீதி கொழும்பு

# தமிழரசார் முடிவு; அரசாங்க வட்டாரங்களில் அதிர்ச்சி

## மந்திரி திருச்செல்வம் நாளை பதவி துறக்கிறார்

## வெளியேறியபின் தனிக்கட்சியாக தமிழரசு இயங்கும்

(நமது காரியாலய நிருபர்கள்)


யாழ்ப்பாணம், ஞாயிறு

உள்ளூராட்சி அமைச்சர் பதவியிலிருந்து செனட்டர் எம். திருச்செல்வம் ராஜினாமா செய்வதென்றும் அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி பிரிந்து வெளியேறுவதென்றும் செய்யப்பட்டுள்ள முடிவைக் கேட்டு அரசாங்க வட்டாரங்களில் அதிர்ச்சியும் எதிர்க்கட்சி வட்டாரங்களில் மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் வட்டாரங்களில் திருப்தி நிலவுகிறது.

தேசிய அரசாங்கத்திலிருந்து ஆளும்கட்சிக் குழுவிலிருந்தும் பிரிந்து தமிழ்அரசுக் கட்சி உடனடியாக வெளியேறுவதென்றும் தேசிய அரசாங்கத்தில உள்ளூராட்சி அமைச்சர்பதவி வகித்துவரும் செனட்டர் எம். திருச்செல்வம் அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்வதற்கு அனுமதியளிப்பதென்றும் சமஷ்டி ஆட்சி அமைப்புக் கோரிக்கையை விடுத்து தனிநாடு அமைக்கப் போராடுவதென்ற தமிழரசு வாலிப முன்னணியினரின் கோரிக்கையை நிராகரிப்பதென்றும் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை நேற்று தீர்மானித்தது.

## ராஜினாமாவுக்கு அனுமதி

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ந் திகதி தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து உள்ளூராட்சி அமைச்சராக பணியாற்றிவந்த செனட்டர் முருகேசன் திருச்செல்வம் அமைச்சர் பதவியை துறக்கிறார்.



அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்வதற்கு அனுமதி தருமாறு திரு. திருச்செல்வம் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபையை நேற்றுக் கோரியபோது எவ்வித மறுப்போ தயக்கமோ இன்றி பொதுச்சபை அமைச்சர் பதவியை திரு. திருச்செல்வம் ராஜினாமாச்செய்வதற்கு அங்கீகாரமளித்தது.

"மந்திரி சபையிலிருந்து திரு. திருச்செல்வம் ராஜினாமா செய்தவுடன் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக்குழு அரசாங்க பாராளுமன்றக்குழுவிலிருந்து வெளியேறி தமிழ்ப்பேசும் மக்களுக்கு பாதகமற்ற விஷயங்களில் அரசாங்கத்தை ஆதரிக்கும் ஒரு சுயாதீனக் குழுவாக பாராளுமன்றத்தில் இயங்கும்."

இவ்வாறு நேற்று நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பொதுச்சபைக் கூட்டத்தைத் தொடர்ந்து கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை டாக்டர் இ. எம். வி. நாகநாதன் தலைமையில் கட்சிப்பொதுச் சபைக்கூட்டம் ஆரம்பமானபோது உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் கோணேஸ்வரர் ஆலய விவகாரத்தில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையின் காரணமாகத்தான் மந்திரி சபையிலிருந்து ராஜினாமாச் செய்ய தீர்மானித்திருப்பதாக ஒரு கடிதத்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் சமர்ப்பித்தார். நிலைமையை விளக்கி அமைச்சர் திருச்செல்வம் இங்கு பேசிய பின்னர் அவர் ராஜினாமாச் செய்யவேண்டுமென்பதை பொதுச்சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

திரு. அ. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் இலங்கையிலுள்ள இனப் பிரச்சினையைத் தீர்க்க சமஷ்டி ஆட்சியே ஒருவழியென்ற கட்சியின் லட்சியத்தைக் கட்சிப் பொதுச்சபை மீண்டும் வலியுறுத்தி ஊர்ஜிதம் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(கா. நி.)

[8-ம் பக்கம்பார்க்க]

## சுவீப் முடிவுகள்

மன்னாரில் இழுக்கப்பட்ட 211-வது தேசிய சுவீப் முடிவுகளில் முதல் பரிசுக்குரிய இலக்கம் 10 K 0810 என்றும் இரண்டாம் பரிசுக்குரிய இலக்கம் 30 J 0208 என்றும் இருக்கவேண்டும்.

## தந்தி விநியோகம் சீர்கேடு

கோப்பாய், சனி

இப்பகுதியில் தந்தி விநியோகம் மிகவும் சீர்கேடான நிலையில் இலகாலமாக இருந்து வருகின்றது. இங்கு வரும் தந்திகள் உரியகாலத்தில் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு போதியளவு [illegible] [illegible] [illegible] மனச் சோர்வடைகிறது.

## நாளைபிரதமரை சந்திக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேசிய அரசாங்கத்திலிருந்து உள்ளூராட்சி அமைச்சர் பதவியை தாம் ஏன் ராஜினாமாச் செய்யவேண்டி நேர்ந்தது என்பதையும் தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேறவேண்டி ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதையும் இம்மாதம் 16-ந் திகதி செனட்சபையில் அமைச்சர் திரு. எம். திருச்செல்வமும் பிரதமரிடம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் செல்லும் தமிழரசுத் தலைவர்களும் விளக்கிக்கூறுவார்கள்.

அரசாங்கத்துக்குகொடுத்துவந்த ஒத்துழைப்பையும் உதவியையும்வாபஸ்பெற்று ஆளும்கட்சியிலிருந்தும் அரசாங்கத்திலிருந்தும் வெளியேறிஆட்சிமன்றத்தில்தாம்கள் தனியாக இயங்குவதென்றுசெய்தமுடிவைபிரதமரிடம் திரு.செல்வநாயகம் எழுத்தில் கொடுப்பாரென்று தெரிகிறது.

தேசிய அரசாங்கம் அமைப்பதற்குக்கொடுத்த உதவியையும் ஒத்துழைப்பையும் வாபஸ்பெற்று அதிலிருந்து வெளியேறவேண்டியேற்பட்ட காரணங்களையும் அடுத்து தாங்கள் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளையும் இம்மாதம் 18ந் திகதி யாழ்ப்பாணமுற்றவெளியில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தி பொதுமக்களுக்கு எடுத்து விளக்குவதென்றும் கட்சிப் பொதுச்சபை முடிவுசெய்திருப்பதாகத்தெரிகிறது.

அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்யமுன்வந்த திரு. திருச்செல்வத்துக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று பொதுச்சபைக் கூட்டத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டதாகவும் தெரிகிறது.

## ஒப்பந்தம்

தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு முன்னர் திரு டட்லி சேனநாயகவும் திரு.எஸ். ஜே. வி. செல்வநாயகமும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற திரு. டட்லிசேனநாயக தவறிவிட்டார் என்பதை திரு. செல்வநாயகம் பிரதமருக்கு விளக்கிக்கூறுவார் என்றும் தெரிகிறது.

அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறி தமிழ்ப்பேசும் மக்களுக்கு பாதகமற்ற விஷயங்களில் அரசாங்கத்தை தமிழரசுக்கட்சி ஆதரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை

1969-ம் ஆண்டுக்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் மணல், கல்லு, சல்லி, தேங்காய் மட்டை முதலிய பொருட்கள் விநியோகம் செய்தற் பொருட்டு பதிவு பெற்ற ஒப்பந்த காரரிடமிருந்து இரு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்காரர் ஒவ்வொருவரும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25/-ம் படிவம் பெறுமதியாக ரூபா 5/ம் 30 9.68ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் செலுத்தி மராமத்து பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்று 4-10-68 நண்பகல் 12-00 முன் இடைக்கக் கூடியதாக பதிவுசெய்த கடித மூலமாகவோ அன்றேல் நேரிலோ விண்ணப்பித்தல் வேண்டும்.

3. மேல்விபரங்களை மராமத்து பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில், அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. பேரம்பலம், (ஒப்பம்)
மாநகர ஆணையாளர்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
5.9.68 983

## அறிவித்தல்

திருக்கேதீச்சரத்திலுள்ள புனித பாலாவித் தீர்த்தக் கரையில் வைத்து அந்தியேட்டி செய்கவிரும்பும் அன்பர்களின் வசதிக்காக நிரந்தரமாக ஒரு சைவக் குருக்களை நியமித்துள்ளோம் என்பதையும் அந்தியேட்டிக்கு ஆகவேண்டிய எல்லா ஒழுங்குகளும் திருக்கேதீச்சரத்திலேயே வசதியோடு ஒழுங்குசெய்து தரப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
திருக்கேதீச்சர
தேவஸ்தானம்,
திருக்கேதீச்சரம்.
12-9-68 982


30-வது தினம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

மாவிட்டபுரம்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
விசேஷ தினங்களில் 2-30
கைகொடுத்த
தெய்வம்

5-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
AVM. ராஜன் - புஷ்பலதா
நடித்த
கற்பூரம்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Michael Caine
in
ALFIE
(ADULTS ONLY)


## அறிவித்தல்

கரைச்சிக் கிராமசபை
கிளிநொச்சி

13.9.68ல் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரமாகிய "கேள்விப்பத்திர அழைப்பு" 'அறிவித்தலில்' காணப்படும் 22ம் 30ம் திகதிகள் என்பவை இதனால் ரத்துச் செய்யப்படுகிறது. மேற்படி திகதிகளுக்குப் பதிலாக முறையே 24ம் 23ம் திகதிகள் என்பதை இதனால் திருத்தம் செய்யப்படுகிறது.

த. செல்லத்துரை,
அக்கிராசனர்,
கரைச்சிக் கிராமசபை,
கிளிநொச்சி.
748


இப்பொழுது திரையிடப்படுகிறது!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
கலைப்பேரரசர்
எம். ஜி. ராமச்சந்திரன்
கன்னடத்து பைங்கிளி
சரோஜாதேவி
கே. ஆர். விஜயா - மனோகர் - நாகேஷ்



நடித்த
நான் ஆணையிட்டால்

நாளை
கிங்ஸ்லி (கொழும்பு)
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த


வட்டுக்கோட்டை பகுதியில்

# சிகரட் புகையிலையில் அதிக வருமானம்

## கூட்டுறவுச்சங்கங்கள் அதிக அக்கறை

அராலி, சனி

சிகரெட் புகையிலை உற்பத்தியில் வட்டுக்கோட்டைப்பகுதியில் மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அராலி 'சிகரெட்' புகையிலை கூட்டுறவுச் சங்கம் இவ்வாண்டு ஒரு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரம் ரூபா பெறுமதியான சிகரெட் புகையிலையை உற்பத்தி செய்து சிகரெட் புகையிலை விளைவிக்கும் விவசாயிகளுக்கு பணமும் இவ்வாரத்தில் கொடுத்துள்ளது. செட்டியார் மடம் கூட்டுறவுச் சங்கம் நாற்பதினாயிரம் ரூபா மதிப்புள்ள பெறுமதியான சிகரெட்புகையிலையை உற்பத்தி செய்துள்ளது. இச்சங்கமும் அங்கத்தவர்களுக்கு இந்த வாரம் பணம் கொடுத்து விட்டது. உப உணவுப் பொருட்களாகிய சின்ன வெங்காயம், மிளகாய் உற்பத்தியிலும் அராலி விவசாயிகள் ஈடுபட்டிருப்பினும், சிகரெட் புகையிலை உற்பத்திதான் கூடுதலான ஆதாயத்தை தருவதாக விவசாயிகள் கூறுகிறார்கள். ஆனால் கிருஷிகர்ம பகுதியினர் செத்தல் மிளகாய் உற்பத்திதான் அதிகூடுதலான வருவாயை தருமென பிரசாரஞ் செய்துவருகிறார். இப்பகுதிக்கு நெல், பயிற்றை, நிலக்கடலை போன்ற உணவுப்பொருட்கள் சிறந்தவையென அரசாங்க உதவி அதிபர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

# டாக்டர் தகநாயகாவுக்கு கள்இறக்கும்தொழிலாளர் நன்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"வட இலங்கையில் மரவரி முறையில் கள்ளு இறக்கும் தொழிலாளர்களுக்குப் பல காலமாக நடைமுறையில் இருந்து வந்த கஷ்டமான கலால் சட்டங்களை மேற்படி சங்கத்தின் வேண்டுகோள்படி தளர்த்தியும் திருத்தியும் தொழிலாளர்கள் கலால் இலாகா, பொலிஸ் இலாகா அதிகாரிகளின் அத்துமீறிய தலையீட்டினால் பாதிக்கப்படாது தமது தொழிலைக் கௌரவமாகச் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளை வகுத்து உதவிய உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யு தகநாயகாவுக்கு வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது" என்ற தீர்மானம் இம்மாதம் 10-ந் திகதி யாழ்ப்பாணத்தில் மேற்படி சங்கத் தலைவர் திரு. கே. ஐ. பூவிலிங்கம் தலைமையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது.

உள்நாட்டமைச்சர் மேற்படி சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் மரவரி முறையில் கடந்த காலத்தில் தொழிலாளர்களுக்கு இல்லாதிருந்த சில சலுகைகளை வழங்கியுள்ளது குறித்தும் அவருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள் கொண்டுசெல்வதற்குரிய வழிப்பாஸின் தூரத்தை ஒரு மைல் தூரத்திலிருந்து இரண்டு மைல் தூரமாக மாற்றியுள்ளது.

பதநீருக்கு வருப்பணி தற்பொழுதிருக்கும் லைசென்ஸ்முறையை 1969ல் இருந்து ரத்துச் செய்துள்ளது. ஆதியவற்றுக்காக சங்கம் அமைச்சருக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

## கமவளர்ச்சிக் கழகம்

உடுவில், சனி

உடுவில் கிராமசபையின் ஆதரவில் ஒரு கம வளர்ச்சிக் கழகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போஷகர்களாக திருவாளர்கள் கி. முருகேசம்பிள்ளை, எஸ். ஸ்ரீனிவாசன், பி. எம். பற்றிக், வி. நடராசா, பி. சண்முகரத்தினம், க. நாகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:-

தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம், உபதலைவர் திரு. கி. ஆறுமுகம், இணைகாரியதரிசிகள் திருவாளர்கள் தி. சி. சண்முகலிங்கம், சி. சங்கரப்பிள்ளை, தனாதிகாரி திரு. த. வி. சரவணமுத்து.

நிர்வாகசபை உறுப்பினர்களாக மேலும் 13 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

67-ம் ஆண்டுநெற்செய்கை

## போட்டியில வெற்றிபெறுபவர்

சாவகச்சேரி, சனி

1967-ம் ஆண்டுப் பெரும்போகத்தில் நடாத்தப்பட்ட நெற்செய்கைப் போட்டியில் ஏக்கருக்கு 71 புசல் நெல் விளைவித்த பூநகரி—செட்டிகுறிச்சி விவசாயி திரு. க. புவனேந்திரன் என்பவர் முதலாம் இடத்தைப் பெற்று, எழுநூற்றைம்பது பரிசும் யாழ். மாவட்ட விவசாயச்சங்கத்தின் பாராட்டுதலையும் பெற்றார். இவர் பரந்தன் ரசாயனத்தொழிற்சாலையில் கடமையாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரயாணிகள் கஷ்டம்

சாவகச்சேரி, சனி

தனங்கிளப்பு மறவன்புலோவு ஆகிய இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகள் யாழ்—கோதிவு பஸ்ஸிற்காகப் பல மணி நேரம் வீதியில் காத்துக்கிடக்க வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் கோதிவு பஸ் சேவை மோசமடைந்துள்ளதாலேயே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளது.

கோதிவுபஸ் கோதிவிலிருந்தே பூனகரிப் பிரயாணிகளை ஏற்றி வருவதால் பஸ்ஸில் இடமில்லாதிருப்பதால் தனங்கிளப்பு பகுதியிலிருந்தும் பிரயாணிகள் வீடுதிரும்பவேண்டிய நிலை ஏற்படுகிறது. போதிய பஸ்சேவையில்லாமையே இதற்குக் காரணமெனப் பிரயாணிகள் குறை தெரிவித்தனர்.

## யாழ் பஸ் நிலையத்தில் ஜேப்படி

உரும்பராய், சனி

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இப்போது ஜேப்படி அதிகரித்து வருவதாக தெரிகிறது.

இருதினங்களுக்கு முன் மட்டக்களப்பு பஸ்ஸில் செல்லவிருந்த ஒருவரிடம் 170 ரூபா கொண்ட பேர்ஸ் [illegible] செய்யப்பட்டுள்ளது [illegible] வார்.

## வரி விளம்பரம்

### தேவை

முகாமையாளர்:

21—35 வயதுக்குட்பட்டவராகவும், குறைந்தது பொதுக்கல்வித் தராதரப் பத்திரம், கூட்டுறவுப்பயிற்சித் தராதரப் பத்திரம் பெற்றவராகவும் இருக்க வேண்டும். ரொக்கப்பிணைப் பணம் 1500/- ஆதனப்பிணை 3000/. சம்பளம் எல்லாம் உட்பட 150/- திறமைக்கேற்றபடி சம்பள ஏற்றம் உண்டு. முழுநேரசேவை விரும்புபவராயின் அச்சகத் தலைவரிடமிருந்தும் வேறு இரு நற்சாட்சிப் பத்திரங்களையும் இணைத்து 25-9-68க்கு முன் பதிவுக் கடிதமூலம் செயலாளர். பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம், கல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 122

### விற்பனைக்கு

நவராத்திரி விழாக்களுடன் தேவிபிரார்த்தனைக்கு தேவி தோத்திரத்திரட்டு 25 சதம். அபிராமியந்தாதி 50 சதம். சகலகலாவல்லிமாலை 10 சதம். ஸ்ரீ சந்திரா அச்சகம்-புத்தகசாலை-யாழ்ப்பாணம். 202

பருத்தித்துறை நகரின் மத்தியில் தும்பளை றோட்டுப் பக்கமாக தெருமூடி மடத்திற்கு அருகாமையாக உள்ள 5 பரப்பு நிலம் 4 அறைகள் கொண்ட வீட்டுடனும் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- பருத்தித்துறைக் கோர்ட்டுப் புறக்கிரசி திரு. சி. செல்லையா அவர்களுடன் தொடர்பு கொள்க. 208

### நன்றிநவில்தல்

9.9..68ல் காலமான அல்வாய் தெற்கு பிரபல இறக்குமதியாளர் திரு. க. கந்தையாவின் ஈமச்சடங்குகளின் போது நேரில் வந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எம்முடன் துயரைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

—பிள்ளைகள் க. நாகரத்தினம், க. கதிர்காமத்தம்பி (ஆனந்தம்). 205

### அறிவித்தல்

வேலணை சாட்டி அர்ச். சித்தாத்திரை மாதா திருநாள் இம்மாதம் 15-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24ம் திகதி சனிக்கிழமை திவ்விய பூசையுடனும் திருச்சொரூபப் பிரகாரத்துடனும் முடிவடையும். யாத்திரிகர்களின் வசதிக்காக 23ம் 24-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலிருந்தும் ஊர்காவற்றுறையிலிருந்தும் கோவிலடிக்கு விசேஷ பஸ் வண்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. எம். ஏ. ஞானப்பிரகாசம் கட்டளைக் குரவர், மண்டைதீவு. 117

## தமிழறிஞருக்கு நினைவுச் சின்னம்

உடுப்பிட்டி, ஞாயிறு

பழம்பெரும் பண்டிதரும், ஆறுமுகநாவலரின் பிரதம மாணாக்கரும், தமிழறிஞருமான அமரர் நா. கதிரவேற்பிள்ளை ஞாபகார்த்தமாக, அன்னாரு [illegible] உருவச்சிலை அமைக்கும் பணியில் பருத்தித்துறைப் பெரியோர்கள் ஈடுபட்டுள்ளனர். பண்டிதர் திரு. பாலசுந்தரம் தலைமையில் இதற்கான வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

இச்சிலையை உருவாக்குவதற்கு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஓவியரும், 'கலைக்கண்ணி' ஆசிரியருமான திரு. எம். சுந்தரலிங்கம் (ஈழத்தீபன்) நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னுபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கு

## யூ தாண்ட் கண்டனம்

## அல்ஜியர்ஸில் ஆரம்பமாகியுள்ள ஆபிரிக்க மாநாட்டில் உரை

அல்ஜியர்ஸ், செப். 14

அல்ஜீரியாவில் நேற்று ஆரம்பமாகிய ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமைச் சங்கத்தின் மாநாட்டில் பேசுகையில், தென்னுபிரிக்காவில் நிலவும் நிலைமை தொடர்ந்து சர்வதேச கவலைக்கிடமளித்து வருவதாக ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் தெரிவித்தார்.

அல்ஜீரியாவில் நடைபெறும் மாநாடு, ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமைச் சங்கத்தின் 5—வது மாநாடாகும். கொங்கோ, கின்ஷாஷா அரசாங்கத்தின் ஜனாதிபதியான ஜெனரல் மொபுட்டு, மாநாட்டைத் திறந்து வைத்தார்.

மாநாட்டில் 30 சுதந்திர ஆபிரிக்க நாடுகள் கலந்து கொண்டுள்ளன. இவற்றில் அரைவாசி நாடுகள், அவற்றின் தலைவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன.

நைஜீரியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை எடுக்குமாறு யூதாண்ட், தமது பேச்சின் போது கூறியுள்ள ஆபிரிக்க நாடுகளைக் கேட்டுக்கொண்டார். வீணாக உயிர்களைப் பலி வாங்கும் அந்தப் போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### காலனி நாடுகளுக்கு கண்டனம்

ஆபிரிக்காவில் காலனித்துவத்தைப் பின்பற்றும் காலனி நாடுகளை யூதாண்ட் கண்டித்தார். தென்னுபிரிக்கா, போர்த்துக்கல், ரொடீஷியா போன்ற நாடுகளையே அவர் கருத்தில் வைத்து இவ்விதம் கண்டித்தார். இந்தக் காலனி நாடுகளுக்கு ஆதரவு அளித்து வருவதற்காக அவர் மேற்கத்திய நாடுகளையும் குறை கூறினார்.

### கவலை

தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை, ஆபிரிக்காவின் பிற பகுதிகளிலும் பரவி வருவதையிட்டுக் கவலை தெரிவித்த ஐ. நா. பொதுக்காரியதரிசி நீதி, சமத்துவம் ஆகிய அடிப்படையில் உலகில் ஒரு சமுதாயத்தை அமைக்க எடுக்கும் முயற்சிகளுக்கு இது ஊறு விளைவிப்பதாக இருப்பதாகக் கூறினார்.

ஆபிரிக்காவின் அமைதிக்கு இத்தகைய இன ஒதுக்கல் கொள்கை ஆபத்தாக விளங்குவதுடன், பலாத்காரத்துக்கும் அது வழி வகுப்பதாக அமைகிறது என்று யூதாண்ட் குறிப்பிட்டார். அது மாத்திரமின்றி சர்வதேச ஐக்கியத்துக்கும் அது ஆபத்தாக விளங்குகிறது என்றார் யூதாண்ட்.



தென்னுபிரிக்காவை அதன் இனவெறிக் கொள்கையைக் கைவிடச் செய்து நீதியை உணர வைப்பதற்கு அதனுடன் வர்த்தகத் தொடர்புகள் வைத்துக்கொண்டுள்ள நாடுகளே அதற்கான பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் யூதாண்ட் கேட்டுக்கொண்டார்.

---

# அரபு நாடுகளுடன் சுமுகமான உறவுகள்

## இஸ்ரேல் விருப்பம்

டெல்அவிவ், செப். 14

கடந்த அரபு-இஸ்ரேல் யுத்தத்தை மறந்து, அரபு நாடுகளுடன் சுமுகமான உறவுகளை நிலைநாட்ட இஸ்ரேல் ஆவலாக இருப்பதாக இஸ்ரேல் உதவிப் பிரதமர் கூறியுள்ளார்.

மேற்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்டும் முயற்சிகளில் ஒத்துழைப்பு அளிக்க இஸ்ரேல் எப்போதும் தயாராக இருப்பதாகவும், ஆனால், நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்தவரை எவ்வகையிலும் விட்டுக் கொடுக்க முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

### 'புதிய போருக்கு உத்தேசமில்லை'

அரபு நாடுகளுடன் புதிய ஒரு போரை ஆரம்பிக்க இஸ்ரேல் தயாராகிவருவதாகக் கூறப்படும் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்று இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. எபான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபுக்குடியரசுடனான போர் நிறுத்தக் கோட்டை மீறும் உத்தேசம் இஸ்ரேலுக்கு இல்லையென்றும் அவர் கூறினார்.

### ஐ. நா.வில் கவலை

ஆனால், ஐ. நா. வட்டாரங்களில், மேற்கு ஆசியாவில் மற்றுமொரு பெரிய போருக்கு இஸ்ரேல் ஆயத்தப்படுத்திவருவதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

### இஸ்ரேல் — ஜோர்தான் மோதல்

இதற்கிடையில், நேற்று இஸ்ரேல்-ஜோர்தான் எல்லையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தில், தத்தம் பக்கத்தில் ஒரு போர்வீரர் கொல்லப்பட்டதாக இஸ்ரேலும் ஜோர்தானும் அறிவித்துள்ளன. சம்பவத்தை ஆரம்பித்ததாக இருசாராரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டுள்ளனர்.

---

# ரொடீஷிய உயர்நீதிமன்ற முடிவுக்கு பிரிட்டன் கண்டனம்

லண்டன், செப். 14

ரொடீஷியாவில் சட்டரீதியான ஆட்சி திரு. அயான் ஸ்மித்தின் ஆட்சியேயென்றும், அவருடைய அதிகாரமே நாட்டில் செல்லுபடியாகும் என்றும் ரொடீஷிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அளித்துள்ள முடிவை பிரிட்டன் கண்டித்துள்ளது.

ஆபிரிக்கத் தேசியவாதிகள் சிலர் மரணதண்டனை விதிக்கப்பட்டபோது பிரிட்டிஷ் பிரிவிகவுன்ஸில் அவர்களை விடுதலை செய்யுமாறு ரொடீஷியாவுக்கு உத்தரவிட்டிருந்தது. ஆனால் ரொடீஷிய உயர்நீதிமன்றம் பிரிவிகவுன்ஸிலுக்கு அப்படி உத்தரவளிக்க அதிகாரம் இல்லையென்று தீர்ப்பளித்தது.

உயர் நீதிமன்றத்தின் முடிவு எப்படியாயினும் அரசியல் சாஸன நிலையில் எவ்வித மாற்றமும் இல்லையென்று பிரிட்டன் கூறியுள்ளது.

ரொடீஷியாவுக்கு எதிராக என்ன சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்பது சம்பந்தமாக பிரிட்டன் ஆராய்ந்துவருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

---

# செக். அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை தேசிய அசெம்பிளி அங்கீகரித்தது

## 'மாஸ்கோ ஒப்பந்தக்கீழ் செயற்படுவதே ஒரேவழி'

பிராக், செப். 14

செக்கோஸ்லொவாக்கிய தேசிய அசெம்பிளி அந்நாட்டு அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இந்த வேலைத்திட்டம், மாஸ்கோ ஒப்பந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்:

செக். அரசாங்கத்தின் இவ்வேலைத் திட்டத்தின்கீழ், பத்திரிகைத் தணிக்கை நாட்டில் மீண்டும் அமுலாக்கப்படும். புதிய அரசியல் குழுக்கள், கோஷ்டிகள் தடை செய்யப்படும். பொது ஒழுங்குக்கு ஊறு விளைக்கும் குற்றங்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கத்தின் புதிய வேலைத் திட்டத்தை தேசிய அசெம்பிளியில் சமர்ப்பித்துப் பல மணிநேரம் பேசிய செக் பிரதமர் திரு. செர்னிக் நாட்டின் அரசியல் சீர்திருத்தங்கள், மாஸ்கோ ஒப்பந்தக் கட்டுப்பாடுகளுக்குள் தொடர்ந்து நடைபெறுமென்று உறுதியளித்தார்.

### ஒரே வழி

தற்போதைய சூழ்நிலையில் நாட்டுக்கு விடப்பட்டுள்ள ஒரேவழி மாஸ்கோவில் செக். தலைவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவுகளை அனுசரிப்பதேயாகும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

### பாதுகாப்பு

வார்ஸோ ஒப்பந்தத்தைப் பலப்படுத்துவதில் செக்கோஸ்லொவாக்கியா, தனது பங்கினை ஆற்றும் என்றும் பிரதமர் கூறினார் பாதுகாப்புக் கவுன்ஸில் ஒன்று நாட்டில் விரைவில் செயற்படும் என்று திரு. செர்னிக் மேலும் தெரிவித்தார்.

### சுதந்திரம்

செக்கோஸ்லொவாக்கியாவின் சுய மரியாதையும், சுவாதீனத்தையும் பாதுகாக்கப்படும் என்ற உறுதிமொழியையும் பிரதமர் தேசிய அசெம்பிளிக்கு அளித்தார்.

வார்ஸோ நாட்டுத் துருப்புகள் செக். நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் விரைவில் ஆரம்பிக்கும் என்று பிரதமர் அறிவித்தார்.

ரஷ்யாவுடனான உறவுகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளைத் தமது அரசாங்கம் எடுக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

---

## ஹங்கேரிக்கு டிகோல் கண்டனம்

பாரிஸ், செப். 14

செக்கோஸ்லொவாக்கியாவில் வார்ஸோ நாட்டுத் துருப்புகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையில் ஹங்கேரியின் பங்குபற்றிப் பிரெஞ்சு ஜனாதிபதி டிகோல் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் புதிய ஹங்கேரி தூதுவராகப் பதவி பெற்றுள்ளவர், நேற்றுப் பிரெஞ்சு ஜனாதிபதி டிகோல் முன்னிலையில் தமது பதவித் தகைமைச் சான்றுகளை அளித்த பின்னர் டிகோல் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

---

# வார்ஸோ ஒப்பந்தத்திலிருந்து அல்பேனியா விலகியது!

டிரானா, செப். 14

வார்ஸோ இராணுவ ஒப்பந்த இராணுவத்திலிருந்து அல்பேனியா விலகுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

வார்ஸோ கூட்டுப் பாதுகாப்பு அணியிலிருந்து அல்பேனியா விலகவேண்டுமென்ற தீர்மானத்தை அல்பேனியப் பிரதமர், நாட்டின் தேசிய அசெம்பிளியில் சமர்ப்பித்தார்.

தீர்மானத்தைத் தேசிய அசெம்பிளி ஏற்றுக்கொண்டுள்ளது.

வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் கூட்டங்களுக்கு 1964ம் ஆண்டிலிருந்து அல்பேனியா அழைக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

65,000 பவுண்

## பெறுமதியான சித்திரங்கள்

### பிரிட்டனில் களவு

லண்டன், செப். 14

பிரிட்டனில், சுமார் 65,000 பவுண் பெறுமதியான கலைச்சித்திரங்கள் வீடொன்றில் களவாடப்பட்டுள்ளன.

---

## வீட்டினுள் கார் பாய்ந்தது

புலோலி, சனி

சாவகச்சேரியிலிருந்து பருத்தித்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி பக்கத்திலிருந்த வீட்டினுள் பாய்ந்தது. வீட்டினுள் இருந்தோர் எவரும் காயப்படவில்லையாயினும் வீட்டின் ஒரு பகுதி பலத்த சேதத்திற்குள்ளாகியதாகத் தெரிகிறது. புலோலிச் சந்தியில் இவ் விபத்து நடைபெற்றது.

---

## ஒரு புசல் நெல் 55 ரூபா

சாவகச்சேரி, சனி

மறவன்புலம், தனங்கிளப்புப் பகுதியில் ஒரு புசல் நெல் இருபத்தொரு ரூபாவாக விற்கப்படுகின்றது. சாவகச்சேரியில் 22 ரூபாவாக விற்கப்படுகின்றது. இவிநொச்சியில் விளைவிக்கப்பட்ட நெல்மூடை ஒன்று 55 ரூபாவாகச் சாவகச்சேரியில் விற்கப்படுகின்றது. நெல்லின் கட்டுப்பாட்டுவிலை புசல் 14 ரூபா என்பதும் குறிப்பிடக்கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசர் ஆலயவரலாறு கோ
# வாயிலிலிருந்தே ஆரம்பிக்க

மணிவாசகம்

சுவர்க்கமும் நரகமும் நமது மனதில்தான் உள்ளன. தெய்வத்துடன் நமது மனம் லயித்துவிடும்போது நாம் சுவர்க்கத்திலிருப்போம். அப்படி லயிக்காதபோது நாம் இருப்பது நரகமே.
— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389

[illegible] ஆவணி மாதம் 30-ந் திகதி
(15-9-68)

## மேற்கு ஆசிய அமைதி

அரபு நாடுகளுடன் சுமுகமான உறவு கொண்டு நிலைநாட்ட இஸ்ரேல் ஆவலாக இருப்பதாக இஸ்ரேல் உதவிப் பிரதமர் தெரிவித்திருக்கிறார். அரபு நாடுகள்மீது மீண்டும் தாக்குதல் நடத்தும் உத்தேசமோ புதிய யுத்தமொன்றை ஆரம்பிக்கும் நோக்கமோ இஸ்ரேலுக்கு இல்லையென்று அதன் வெளிவிவகார அமைச்சர் அறிவித்திருக்கிறார். மேற்கு ஆசியாவில் அமைதி ஏற்படமுடியுமென்பதற்கு இஸ்ரேல் உதவிப் பிரதமரும் வெளியுறவு மந்திரியும் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் நல்ல சமிக்ஞையாக இருக்கிறது. மேற்காசிய அமைதியையும் உலக சமாதானத்தையும் உண்மையில் விரும்பும் அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்த முன்வர வேண்டும்.

இஸ்ரேல் உருவாகியதன் மூலம் அரபுமக்கள் பலருக்குப் பெரும் தொல்லைகளும் கஷ்டங்களும் ஏற்பட்டிருப்பது உண்மையே. ஆயினும் இஸ்ரேல் என்ற ஒரு நாடு உருவாகி வளர்ந்துள்ள தென்பதை ஒப்புக்கொள்ள மறுப்பதன் மூலம் அரபுமக்கள் தங்கள் கஷ்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்துகொள்ள முடியுமா என்பதே கேள்வி. இஸ்ரேலை அங்கீகரிப்பதற்கு அரபுநாடுகள் இதுவரை மறுத்துவந்திருக்கின்றன. இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் சென்ற வருடம் நடைபெற்ற யுத்தத்தில் இரு தரப்பினருக்கும் சேதமேற்பட்டபோதிலும் அரபுநாடுகளுக்கே அதிக சேதம் ஏற்பட்டது. இந்த யுத்தத்தினால் இஸ்ரேலுக்கும் மட்டுமல்லாது இலங்கை உட்பட இதரப் பெரிய நாடுகளுக்கும் பலவித கஷ்ட நஷ்டங்களேற்பட்டன. யுத்தம் நிறுத்தப்பட்டபோதிலும் இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்குமிடையில் இன்னமும் இடையிடையே மோதலும் கைகலப்பும் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. இந்த நிலை இப்போதுள்ள சூழ்நிலையில் மாறுமென்று எதிர் பார்ப்பதற்கில்லை. பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் அச்சமும் அவநம்பிக்கையும் இருக்கும் வரை அங்கு நிரந்தர அமைதி நிலவமுடியாது.

சென்ற யுத்தத்தின் போது இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப்பகுதிகளை திருப்பிக்கொடுப்பதற்கு இஸ்ரேல் மறுத்துவருவது 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற மனப்பான்மையுடையதுதான். இந்த மனப்பான்மை இப்பொழுது மாறிவருகிறது என்பதற்கு 'கைப்பற்றிய பகுதிகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு முடிவுக்கு வரலாம்' என்று இஸ்ரேலியத் தலைவர்கள் கூறியிருப்பது சான்று.

இஸ்ரேலியத் தலைவர்களும் அரபுத் தலைவர்களும் நேரடியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினால் மேற்கு ஆசியாவில் நிரந்தர அமைதி ஏற்படவும் இருதரப்பினரும் முன்னேறவும் வழி காணமுடியும்.

## சிற்பாசிரியர் மறைவு

உடுப்பிட்டி, சனி

ஈழத்தின் தலைசிறந்த சிற்பாசிரியரான திரு. க. கந்தையா இம்மாதம் 8ந் தேதி காலமானார். இந்தியாவில் சாஸ்திரிய முறைப்படி சிற்பக்கலையை பயின்ற இவர் அனுராதபுரம் கதிரேசன் கோவில், வற்றாப்பளை அம்மன் கோவில், புதூர் நாகதம்பிரான் கோவில், பருத்தித்துறை சிவன் கோவில், ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில், திருக்கோணமலை கோணேஸ்வரர் ஆலயம் போன்ற பிரசித்தி பெற்ற ஆலயங்களின் திருப்பணிவேலைகளைச் செய்துள்ளார்.

## ஆண்டுவிழா கொண்டாடினர்

வல்வெட்டித்துறை, சனி

இன்பருட்டி கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய 13-ம் ஆண்டுநிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்பருட்டி கடற்கரை மைதானத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. என. ஜெயகாந்தன் கொடியேற்றினார். பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மின்னொளியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி க. துரைரத்தினம் பரிசில்கள் வழங்கினார். திரு. த. சிவபாதசுந்தரம் நன்றி கூறினார்.

## புதிய தபால் நிலையம்

கோப்பாய், சனி

அச்செழுவில் புதிய உப தபால் நிலையமொன்றை அமைப்பதற்கு ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந் நிலையம் கோப்பாய் தபால் நிலையத்தின் கீழ் செயற்படும் எனத் தெரியவருகிறது.

இலங்கையில் உள்ள பாடல்பெற்ற தலங்களுள் திருக்கோணேஸ்வரமும் ஒன்று. பண்டைக் காலத்தில் இலங்கையில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி இருந்ததற்கு அத்தாட்சியாக திருக்கோணேஸ்வர வரலாறு விளங்குகின்றது. கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே என்ற திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் அருட்பாடலில் சிறப்பிக்கப் பெற்ற பெருமை இத்தலத்திற்கு உண்டு.

குளக்கோட்டன் காலத்தில் கோணேஸ்வரம் இருந்த பெருமையை இன்றும் சரித்திர வாயிலாக நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. பண்டைப் பெருமையை இன்று அடைய முடியாவிடினும் கோணேஸ்வரத்தின் புனிதத்தன்மையைப் பாதுகாப்பதிலாவது இன்றைய சைவர்கள் அக்கறை காட்டவேண்டியது அவசியமாகிறது.

திருக்கோணேசர் ஆலயம் உள்ள பகுதியை புனித ஸ்தலமாகப் பிரகடனம் செய்வது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனைக்காக திருக்கோணமலை கோணேசர் ஆலயபரிபாலன சபையின் உபதலைவரும் வழக்கறிஞருமான திரு. எம். கே. செல்வராசா இந்த அறிக்கையை சமர்ப்பித்தார். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு தொடர்ந்து செயலாற்றுவதை பிரதம மந்திரி இப்பொழுது தடுத்து நிறுத்தியுள்ளது அறிந்ததே. கோணேசர் ஆலயத்தின் பழமைப் பெருமையையும் தமிழருக்கும் சைவத்துக்கும் அது எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் இந்த மகஜர் விளக்குவதால் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

— எம். கே. செல்வராசா —

### சரித்திரக்கண்ணாடி

பிரட்டரிக் கோட்டையின் உள்ளே அமர்ந்திருக்கும் கோணமாமலை அமர்ந்தாரை தரிசிக்க இன்று ஆயிரக் கணக்கான சைவர்கள் நாடு பூராவுமிருந்து வருகின்றனர். இன்று பிரட்டரிக் கோட்டையினுள்ளே பல அரசாங்க அலுவலகங்கள் உள்ளன. கோட்டை நுழைவாயிலின் இருமருங்கிலும் பாண்டியன் சின்னமான மீன் இலச்சினைகள் இன்றும் காணப்படுகின்றன. நுழை வாயிலில் தூணில் காணப்படும் இம் மீன் இலச்சினைகளுடன் குளக்கோட்டை மகாராஜா பாடிவைத்த "முன்னே

## முழுப்பகு[illegible]
## ஆக்கப்[illegible]

குளக்கோட்டன் மூட்டும் திருப்பணியை" என்று தொடங்கும் கல்வெட்டு காணப்படுகின்றது. கோணேசர் ஆலயத்தின் வரலாறு பிரட்டரிக் கோட்டை நுழைவாயிலில் இருந்தே ஆரம்பமாகின்றது. ஆலயத்தின் பழம் பெருமையைச் சுட்டிக்காட்டும். இம்மீன் இலச்சினைகளும் கல்வெட்டும் சைவர்கள் தங்கள் இருகண்கள் என்று போற்றிப்பாதுகாக்கப் பட வேண்டியவை. ஆனால் இன்றே அவை நுழைவாயிலின் நுழைவாயிலின் [illegible] கண்ணுக்கும் பூச்சும் மற்றும் தேவைகளுக்கும் பயன்பட்டு வருகின்றன. சைவத்தினதும் தமிழர்களினதும் சரித்திரக் கண்ணாடியாக விளங்கும் இச்சின்னங்கள் நன்றாகப் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதை விசாரணைக் கமிட்டியினர் உணர வேண்டும்.

# கல்விமரபை போற்றிவரும் பேரறிஞர் பண்டிதமணி

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நடைபெற்ற சாகித்திய மண்டலத்தின் இலக்கிய விழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்குச் 'சங்கச் சான்றோர்' என்ற விருது வழங்கப்பட்டபோது ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் இக்காலத் தமிழ்க் கவிதைக் குழுத் தலைவரான வித்தியாரத்தினம் நவாலியூர் சோ. நடராசன் பண்டிதமணியை அறிமுகஞ்செய்துவைத்து மாராட்டி சிங்கள மொழியிற் கூறியவற்றின் சுருக்கமான தமிழ் ஆக்கம் இங்கு தரப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலத்தினால் இவ்வருடத்தில் 'சங்கச் சான்றோர்' என்ற விருதினைப் பெறுபவரும், மிகச் சிறந்த தமிழ்ப்பேரறிஞருமாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையை உங்களுக்கு அறிமுகஞ் செய்து வைப்பதில் பெருமைப்படுவதோடு, அத்தனைய பெரும் பேறெனவும் அகமகிழ்கிறேன்.

கந்தபுராணத்திலுள்ள [illegible] இலக்கியப்பரிசினை

யும் இவர் பெறுகிறார். பேராதனையிலுள்ள பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் சென்ற வருடத்திற்றான் இத் தமிழ்ப்பேரறிஞரை சடங்கிணையில்லாத முறையிற் கௌரவித்தது. எங்களது பண்டைக்கால மன்னர், தமிழ்ப் புலவர்களுக்கு அளித்த விருதை அன்றைவிழா ஞாபகமூட்டிற்று. இவ்விருதைப் பெறுவதற்கு மிகவும் அருகதையானவர் இவரென்பது எனது உறுதியான எண்ணம். இந்நாட்டிலே பழைய காலந்தொட்டு கல்விமரபாகிய தூண்டாமணி விளக்கை அணையாது போற்றிவந்த பேரறிஞர் வரிசையில் வைத்து எண்ணப்படுபவர் பண்டிதமணி அவர்கள்.

இவர்தாம், புத்தமத பெருந்தலைவரான அநாகரிக தர்மபாலா, வித்தியோதய வித்தியாலங்கார பிரிவெனாக்களைத் தாபித்த ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல வலானே இரத்மலான ஸ்ரீ தம்மாலோக மகாதேரர் ஆகியோரைப் போன்று இலங்கையிலே தேசிய மறுமலர்ச்சியை உண்டாக்கியவரும், தலைசிறந்த அறிஞரும் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்தவருமான சைவசமயச் சீர்திருத்தக்காரருமான யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஏற்றிவைத்த கல்வியென்னும் தூண்டாமணி விளக்கைத் தாங்கி ஒளிபெறச் செய்தவரும் வடமொழி தென்மொழிகளிற் பூரண புலமைபெற்ற அறிஞரென இலங்கை இந்தியா ஆகிய இருதேசங்களிலும் போற்றப்பட்டவருமான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கராகக் [illegible] பெற்றினைப் பெற்றார். சைவசமயத்

தினை ஆய்ந்து விளக்கி ஆசிரியர்களாகிய ஒருங்கு விளங்கிய பண்டிதமணி அவர்கள் புகழ்வாய்ந்த இவ்வரன்முறைத் தமிழ்க் கல்வி மரபினை 40 வருடமாக அழியாது பாதுகாத்துவந்துள்ளனர்.

இவர் மரபு பண்பான ஞானிலும் இளஞ்சந்ததியினருக்கு உணர்ச்சியூட்டி இலங்கையின் புதுமை எழுத்தாளரின் முன்னணியில் நிற்கின்றார். இவர் சிறுகதை தொடுத்து கந்தபுராணம் போன்ற பெருஞ் செய்யுள் நூல்களுக்கு எழுதிய ஆராய்ச்சியுரைகள் வரைகலை ஆக்கங்களைச் செய்திருக்கின்றார். இவரது அண்மைக்கால ஆக்கமாகிய கந்தபுராண தக்ஷகாண்ட உரைக்காக இவ்வருடத்தில் இவர் இலக்கியப் பரிசினை பெறுகிறார். சைவசித்தாந்த சாரத்தின் பண்டை நலமும் தூய்மையும் பொலிய, 800 பக்கங்களைக் கொண்டு விளங்கும் இத்தலைசிறந்த நூல், இன்றுள்ள சாதாரண வாசகர்களும் படித்துப் பயனடையும் வண்ணம் சமய உண்மைகளை மிகவும் தெளிவாக விளக்குகின்றது.

பண்டிதமணி அவர்கள் ஒரு சிறந்த இலக்கிய விமர்சகர். தமிழ் இலக்கியத்தினை விளக்கி நயக்க இவரது பல இலக்கியக் கட்டுரைகள் பெரும் பணியாற்றியுள்ளன. பழைய இலக்கிய விமரிசன மரபுக்கு புத்தம் புதிய இக்காலத் தோற்றத்தினைக் கொடுக்கக்கூடிய அருங்கொடையைப் பெற்றவர். இவர் சிறந்த அறிவுடைய மாணாக்கர் குழாமொன்றை உருவாக்கி

யுள்ளார். அவர்களுள் இன்று தமிழ்க் கல்வியில் புகழ் பெற்றவர்களாக விளங்குகின்றனர். இவர் நகைச்சுவையுடன் இனிமையுடன் [illegible] வேளைகளில் ஆழ்ந்த கருத்துக்களையுடன் பேசக்கூடிய சிறந்த பேச்சாளர்.

காலஞ்சென்ற மகாகவி [illegible] தரப்புலவரின் சிறந்த நண்பராகவும், அவரிடம் மிக்க ஈடுபாடுடையவராகவும் விளங்கிய பண்டிதமணி அவரது ஆக்கங்களுக்கு மிகச் சிறந்த இலக்கியத் திறனாய்வுரை வழங்கி அவரது பாடல்களை நாடறியச் செய்தார். சமய வாழ்க்கையைக் கடைப்பிடித்தொழுகும் இவரது சிறந்த சமயக் கட்டுரைகள், இலக்கிய கட்டுரைகள் சமகாலத்திற் [illegible] விக்கவிக்கப்பட்ட பெரும் பணிகள். இவர் தமது பணியினால் இலங்கை எழுத்துத் துறைக்குச் சிறப்பையுண்டாக்கினார். தோட்டமையாது இலங்கை எழுத்தாளர்களினதும் அறிஞர்களினதும் சிறப்பைத் துணிவாக எடுத்துக் காட்டினார். தமது வாழ்நாள் முழுவதும் பிரமசாரியாகவே வாழ்ந்து வரும் இவர் கடந்த 40 வருடங்களாகத் தமிழ் புலமைத் துறையை வளம்படுத்தி வருகிறார். இற்றைக்கு 5 ஆண்டுகளுக்கு முன்னர் சிறி ராகுல தேரர் [illegible] செல்வி ஹினி சந்தேசய (பூவைவிடுதூது) என்ற கவியத்தை நாம் தமிழ்ப்படுத்திச் செய்தபோது பண்டிதமணியவர்கள் ஒன்றுபட்ட சிறிலங்கா சமுதாயத்தை மனக்கண்ணிற் கொண்டு, இம்முயற்சி "இரு மொழிக்கும் தூது சொலித் தூது" என வாழ்த்துரை கூறி வரவேற்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டையின் ...க்கிறது

தற்போது கோயில் இருக்கும் இடத்திற்குச் செல்லும்வரை நம் மனதில் என்ன உணர்ச்சி ஏற்படுகின்றது. பழம் பெரும் புகழ் வாய்ந்த கோணேசர் ஆலயத்தின் சரித்திரத்தைக் கூறும் கற்றூண்க

## ...பகுதியும் புனித நகர் ...கப்பட வேண்டும்

### வெறும் கற்கன்று

இந் நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் கருங்கல் தூண்களையும் தலை உடைந்த கால் உடை சிற்பங்களையும் காணக் கூடியதாக இருக்கிறது. வெறும் கற்றூண்கள் தான் இவை என்று இன்று பார்ப்பவர்கள் தங்கள் கால்களால் தள்ளி விட்டுச் செல்கின்றனர், கோட்டையினுள்ளே இதுவரை கிடக்கும் உருவங்கள் வெறும் கற்கள் அல்ல தமிழினத்தின் சைவ சமயத்தின் நீண்டகாலப் பேராட்டத்தினைக் காட்டும் அடிச்சுவடுகளாக அவை இருக்கின்றன. பண்டைக்காலத்தில் கோயிலை பக்தர்கள் பாவித்த வழி இன்று அடைக்கப்பட்டுக் கிடக்கின்றது. இன்று இடிந்து வாழும் இணைமூகக் காட்சியளிக்கின்றது! வேற்றுமதத்தவர்களின் அன்றாட அலுவல்களுக்குப் பயன்படும் இன்றும் இச் சுனை பாவிக்கப்பட்டு வருவதை நாம் காணக் கூடியதாகவிருக்கின்றது.

களுக்கும் சின்னங்களுக் குமிடையே நாம் சென்று கொண்டிருக்கின்றோம் என்ற எண்ணம் தான் நம் மனதில் ஏற்படுகின்றது.

### பொறுமை விளங்கும்

அந்த அளவு புனிதத்தன்மையும், பசுமையான சூழ்நிலையும் கொண்ட பிரட்ரிக் கோட்டையினுள் இன்று கோணேஸ்வராலயத்துடன் வேறு என்ன இருக்கின்றது என்று ஆராய்ந்து பார்த்தால் சைவர்கள் எவ்வளவு பொறுமைசாலிகள் என்பது புரியும்.

இராணுவம் ஒருபுறம், அரசாங்க அலுவலகங்கள் ஒருபுறம், உல்லாசப் பிரயாணிகள் நிலையம் ஒருபுறம் இப்படிக் கேளிக்கைகள் நிறைந்த இடமாக மாறிவிட்டது. மனிதர்களைக் கண்டு பயப்படாது துள்ளித் திரிந்த புள்ளிமான்கள் இன்று உணவின்றிச் சாகின்றன. சில உணவுக்ாகச் சாகடிக்கப்படுகின்றன. அமைதியும் சாந்தமும் நிலை வேண்டிய கோட்டையில் கும்மாள

மும் எக்களிப்பும் தாண்டவமாடுகின்றது.

இந்த நிலையில் இக்கோட்டையின் நடுவே கோணமாமலை அமர்ந்தார் குடிகொண்டிருக்கின்றார் என்றால் சைவர்கள் எவ்வளவுக்கு வேதனைப்பட வேண்டிய விஷயம் இது என்பதையும் உணர வேண்டும்.

இந்த சூழ்நிலையில் அரசாங்கம் கோணேசராலயத்தைச் சுற்றியுள்ள எந்தப் பிரதேசங்களையெல்லாம் சேர்த்துப் புனித நகராகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று அறிக்கை சமர்ப்பிக்க ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்துள்ளது வரவேற்கத்தக்கது. பிரட்ரிக் கோட்டை முழுவதையுமே புனித பிரதேசமாகப் பிரகடனஞ் செய்ய வேண்டுமென்பதே எனது கோரிக்கை. அப்பொழுது தான் உண்மையிலே புனித பிரதேசம் என்ற சொல்லுக்கு மதிப்புள்ளதாக இருக்கும். இக்கோரிக்கையை நான் விசாரணைக் கமிஷனின் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன்'-

[திரு. நி.]

## இருவருடங்களின் பின் கூடும்

காங்கேசன்துறை, சனி வடபகுதி ரவி குமாரன்தா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இரு வருடங்களின் பின் இம்மாதக் கடைசியில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்படவிருக்கின்றது.

## தம்பிரான் சுவாமிகள் தமிழகம் செல்வார்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன அதிபர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அடுத்தமாதம் பிற்பகுதியில் திருச்செந்தூரில் நடைபெறும் கந்தஷஷ்டி விழாவில் விரிவுரையாற்ற அங்கு செல்லவிருக்கிறார்.

## வடக்கில் கொங்கோ கப்பல்

அளவெட்டி, சனி கடந்த இரவு காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொங்கோ தேசத்து அகதிக் கப்பல் ஒன்று வந்து சேர்ந்தது.

[11ம் கலத் தொடர்ச்சி]

முப்படைகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. அப்படியிருக்க கடத்தல்காரர்களைச் சாக்கிட்டு ஏன் நமது சாதாரண மனித உரிமையைப் மறுக்கவேண்டும்? வேறு எந்த நாட்டிலும் இப்படி உண்டா? கப்பல் மார்க்கமாகச் செல்ல ஏன் இலங்கையருக்கு மட்டும் அனுமதி மறுக்க வேண்டும்? விமானக் கட்டணங்களை ஏன் இப்படி அநியாயமாக உயர்த்த வேண்டும்? இதைப்பற்றிக் கேள்வி கேட்பாரில்லையா? அதிகாரிகள் வைத்ததுதான் சட்டமா? இதற்குப் பார்லிமென்ட் அனுமதி கிடைத்துள்ளதா?

மலையே வந்து வீழினும்
மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப்
பெறுதிரேல்
தலைவனாகிய ஈசன்
தமர்களைக்
கொலை செய்யானை தான்
கொன்றிடுகிற்குமே.
—அப்பர் சுவாமிகள்

சிறைமல் கருமம் ஆற்றுவது அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கையாக இருக்கிறது. அரசாங்க சேவையாளர்களும் ஆசிரியரின் நிலமையும் கதை போன்றில் வரும் கிடைபெரலாவை ஒத்திருக்கிறது.

கௌரவ கல்வி மந்திரிகளைப் போ, அவருடைய சில உத்தியோகத்தரைப் போ, ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகள் கூடப் பேட்டி காண முடியாது. ஆசிரிய சங்கங்களின் பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் தான் உயர்கல்வி அதிகாரிகளை மிக முக்கியமான விடயங்கள் பற்றி பேட்டி கண்டுள்ளனர். கல்வி மந்திரியவர்கள் சமீபகாலத்தில் நிகழ்த்திய விரிவுரையொன்றில் இலங்கையில் உள்ள ஆசிரியர்கள் உலகத்திலுள்ள மற்ற ஆசிரியர்களிலும் பார்க்க மிகச் சிறந்தவர்களென்று கூறினார். அவரின் பரிபாலனத்திலுள்ள கல்விப் பகுதிக்கும் ஆசிரிய சமூகத்திற்குமிடையில் நிலவுகின்ற உறவைப் பார்க்கின் அவர்களுடைய புகழ்மாலை மிகுந்த மனவேதனையைத் தருகின்றது.

பொதுத் தொழில்நுட்பக் கல்வி கலாசேவா நாகீட்டப் பட்டபோதிலும் இதிலுள்ள பல அம்சங்கள் நிர்வாகக் கட்டளைகள் மூலம் அமுல் செய்யப்படுகின்றன. பாடசாலையின் புனரமைப்பு என்ற போர்வையில் புதியமசோதாவின் கீழ் நிறைவேற்ற எண்ணியிருந்த பல மாற்றங்கள் அவசரமாகநிறைவேற்றப்படுகின்றன. இவற்றைப் பற்றி ஆராயவோ தமது கருத்துக்களை தெரிவிக்கவோ கல்வியில் ஈடுபாடு உடையவர்களுக்கு எவ்வித சந்தர்ப்பமும் அளிக்கப்படுவதில்லை.

கல்வி இலாகா ஒரு மதிய பீடத்தில் எல்லா அதிகாரங்களையும் ஒதுக்கி வைத்து எவ்வளவு வேகமிடமான, சீர்கேடான முறையில் எங்கள் பாடசாலைகளை நடாத்துகின்றது என்ற உண்மை நிலையை மக்கள் உணரச் செய்வது ஆசிரிய தொழிற்சங்கங்களின் தலையாய கடமைகளில் ஒன்றாக இருக்கவேண்டும்.

### ஐயாறன் எழுதுவது

இந்திய பிரயாணத்திற்குப் புதிய கட்டுப்பாடுகள் வரப்போவதாக ஒரு பத்திரிகைச் செய்தி வலுவுறுத்துகிறது.

இதுவரை இலங்கையர் யாரும் இந்தியா செல்ல வேண்டுமானால் இலங்கை பாஸ்போர்ட் அல்லது அவசர அத்தாட்சிப் பத்திரமோ பெறுவதுடன், இந்திய ஹைகமிஷனில் 'விசா' என்ற அனுமதிபெறவேண்டியிருந்தது. அவசர அத்தாட்சிப் பத்திரம்பெற விரும்புபவர் பிறந்த பத்திரமோ அல்லது ஒரு ஜே.பியிடமோ இன்றேல் ஒரு பொறுப்பான அரசாங்க அதிகாரியிடமோ அத்தாட்சிக் கடிதம் பெறவேண்டுமென்பது விதி.

விமான வழியாகச் செல்லுவதாயின் யாழ்ப்பாணத்திலிருந்து திருச்சிக்கு முன்னர் 95 ரூபாதான் கட்டணமிருந்தது. ஆனால் இப்போதோ 206 ரூபாவென்று திடீரென ஏற்றி விட்டார்கள். இரண்டாயிரம் ரூபாவாக உயர்த்தினாலும் கேள்வி முறை இல்லை! கட்டணத்தை இரட்டிப்புக்கு மேல் அதிகரித்து விட்டதால் விமானம் பல நாட்களிலும் அநேகமாகக் காலியாகவே சென்று திரும்புகிறதாம்.

கப்பல் வழியாகச் சென்றால் கட்டணம் குறைவு. ஆனால் இலங்கைக் கப்பல் வழியாகச் செல்லவேண்டுமாயின் அதற்கு சொலவணி இலாகாவிடமிருந்து பர்மிட் பெறவேண்டும். இதில் அதிக கண்டிப்பாக இருப்பதாயும், பர்மிட் கிடைப்பது குதிரைக் கொம்பென்றும் தெரிகிறது.

இனி எந்த வழியில் செல்வதாயினும் இந் நாட்டிலிருந்து வெளியேறுவதற்குக்கூட விசா என்ற அனுமதியைப் பெறவேண்டுமாம். தங்களுடன் எடுத்துச் செல்ல இருக்கும் துணிமணிகளைக் கொண்டு செல்வதற்குக்கூட அனுமதிபெற வேண்டியிருக்கும் மன்றும். முதலில் அவ்வாறு அனுமதி பெற்றால்தான் பிரயாணச் சீட்டு சொலவணிக்கான அனுமதி இவைக்கு மனுச் செய்யலாமென்று அச் செய்தி கூறுகிறது.

இந்தச் செய்தி உண்மையானால், இங்கிருந்து யாரும் இந்தியாவுக்குச் செல்ல அநேகமாக முடியாமற்போகும். யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்திலுள்ள சிதம்பரம், மதுரை முதலிய ஸ்தலங்களுக்கு பலர் வருடத்தில் இரண்டுமுறை யாத்திரை செல்லும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. ஆனால் ஜன்மத்திற்கு ஒரு தடவை தான் யாத்திரை செல்லலாமென்று முன்னர் அரசாங்கம் உத்தரவிட்டதால், யாத்திரையாக தமிழகத்திற்கும் ஒருமுறைதான் செல்லலாமென்றும், பின்னர் அங்கு செல்ல அனுமதிக்க முடியாதென்றும் அதிகாரிகள் மறுத்துவிடக்கூடும். இப்போது இலங்கையில் நடப்பது ஜனநாயக ஆட்சியா? அல்ல அல்ல. அதிகாரவர்க்க ஆட்சிதான். நமது அடிப்படை மனித உரிமையைப்பற்றி அவர்களுக்கு என்ன கவலை?

இப் புதிய தடைகள் போட என்ன காரணமாம் தெரியுமா? வாரோ சிலர் புடவைகளையும், இரத்தினக் கற்களையும் கடத்திக் கொண்டு போகிறார்களாம். அதனால்தான் இப்புதிய தடைகள் என்று சொல்கிறார்கள். கடத்தல்கள் கூடாதுதான். அதைத் தடுக்க

[10-ம் கலம் பார்க்க]

# ஆசிரியர்கள் பல உரிமைகளை சமீபகாலத்தில் இழந்துவிட்டனர்

## வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் கவலை

ஆசிரியர் நீண்ட காலமாக வாதாடிப் பெற்ற பல உரிமைகளை சமீபகாலத்தில் இழந்ததுடன் சில மோசமான தாக்குதல்களுக்கும் ஆளாகிவிட்டனர். ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளுக்குச் சிறிது இடமளித்து சொற்ப காலம் இயங்கிவந்த இடமாற்றச் சபைகள் ஒழிக்கப்பட்டு விட்டன. பொதுவாக ஏற்கக்கூடிய ஒரு திட்ட அடிப்படையில் செய்யாமல், ஒரு சில கல்வி அதிகாரிகளின்விருப்பத்தின்படியே ஆசிரிய இடமாற்றங்கள் நிகழ்கின்றன. ஆசிரியருக்கு இடைக்கின்ற சில பதவி, உயர்ச்சிகள் முன்னரேமுறையாகப் பிரசுரிக்கப்பட்ட நியாயமான திட்ட அடிப்படையில் வழங்கப்படுவதில்லை. ஆசிரிய சங்கங்கள் பல ஆண்டுகளாக திரும்பத் திரும்ப வற்புறுத்தியும் சேவை மூப்புப் பட்டியல்கள் தயாரிக்கப்படவில்லை. முறையாகப் பதவி உயர்ச்சி பெறும் வாய்ப்புகள் மிக மிக அரிது.

இவ்வாறு நேற்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமான வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் தலைமை உரை நிகழ்த்திய சங்கத்தலைவர் திரு. எஸ். மகேசன் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: தற்பொழுது விசேட பதவிகள் வழங்கப்படுமெனநம்புவதற்குஎவ்வித அறிகுறியுமில்லை. ஆசிரியர்கள் தமதுகல்வியையும் தராதரத்தையும் கூட்டுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட ஒரு சில சலுகைகளும் நீக்கப்பட்டுள்ளன. உதாரணமாகத் தமது சேவைக்காலத்தில் பட்டதாரிப் பரீட்சைகளில் சித்தியடையும் ஆசிரியர்கள் 1967, 11ம் மாதம் முதல் திகதி தொடக்கம் சம்பள விடயங்களுக்குப் பட்டதாரிகளாகக் கருதப்படமாட்டார்கள். இவ்வாசிரியர்கள் உரிய சந்தர்ப்பங்களில் புதிதாக மனுச் செய்து பட்டதாரி ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்படவேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்னரே நிவர்த்தி செய்திருக்கவேண்டிய பல குறைகள் பற்றி இதுவரை அரசாங்கம் செவிமடுக்கவில்லை. ஆசிரியர் மத்தியிலுள்ள சில பிரிவினருக்கு வாழக்கூடிய வேதனம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு வழங்கப்படும் உயர்வுப்படிகள் ஏளனத்துக்குரியன. பல்வேறு ஆசிரியப் பிரிவுகளுக்குரிய சம்பளத்திட்டங்களில் ...

பாடுகள் உண்டு. அத்துடன் ஆசிரியர்களுக்கும் அவர்களுடன் ஒப்பிடக் கூடிய தராதரமுடைய வேறு அரசாங்கப் பகுதிகளிலும், தனியார் துறைகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கும் வழங்கப்படும் வேதனங்களில் திகைப்பை ஏற்படுத்தக் கூடிய வித்தியாசங்கள் உண்டு. இளைப்பாற்றுச் சம்பள விடயத்திலும் வேறு நன்மை பயக்கக் கூடிய காரியங்களிலும் மற்றும் அரசாங்க ஊழியருடன் எங்களுக்குச் சமமான உரிமைகள் இல்லை. அத்துடன் எங்களுடைய வேலைப் பழு படிப்படியாக கூட்டப்படுகின்றது. பாடசாலை வேலை நாட்கள் 210 ஆக அதிகரித்துள்ளன. கல்வி இலாகா போயா தினங்களுக்கு முந்திய நாட்களையும் பாடசாலை வேலை நாட்களாக்க உத்தேசிப்பதாக அறிகின்றோம். வேலை நாட்களைக் கூட்டிக் கூடிய பலனைப் பெறலாம் என்ற சித்தாந்தம் கல்வி உளநூல் சாஸ்திரம் கண்கொண்டு நோக்கின் எவ்வளவு தப்பானதும், சீர்கேடானதும் என்று நாம் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமில்லை. கல்வி ...

# "ஆண்டவன்முன் அனைவரும் சமமெனின் ஆலயப்பிரவேசத்தில் தடை ஏன்?"

### பாரதிவிழாவில் பேச்சு

சுழிபுரம், சனி

"இன்றைய காலகட்டத்தில் நாம் பழம்பெருமைகள் பேசுவதிலும், சாதிபேதி உயர்வு தாழ்வு காட்டுவதிலும் எவ்வித முன்னேற்றத்தையும் கண்டுவிட முடியாது. உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு தம்மில் ஒரு பகுதியினரின் உரிமைகளை வழங்காது குறைந்தவர்கள் என்று கூறுபவர்களும் பார்க்கமிகவுமிழிவான காரியங்களைச் செய்பவர்கள் நிறைந்த நாடு நம்நாடு. ஆண்டவன் சன்னிதியில் அனைவரும்சமம் என்று கூறும் மக்கள் ஏன் தம்மில் ஒரு பகுதியினரை ஆலயங்களுக்குள் செல்லாது தடுக்கின்றனரோ தெரியவில்லை. தமக்குள் பூசல்கள் வேண்டாம்! எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்வோம் எனப் பாரதியார் கூறி வழிகாட்டியுள்ளார். அவரின் நினைவுதினத்தைக் கொண்டாடுவது எவ்வகையிலும் பொருத்தமாகும்."

இவ்வாறு மறுமலர்ச்சி மன்றத்தினர் கொண்டாடிய பாரதிதின விழாவில் பேசிய திரு. மு. வைரமுத்து குறிப்பிட்டார். விழாவுக்கு திரு. பொ. செல்லரத்தினம் தலைமைவகித்தார். பண்டிதர் க. பொ. ஆகிநாதர் உட்பட மற்றும்பலர் பேசினர். செல்வி இ. சுப்பிரமணியம், செல்வன் க. இபாலன் பாரதிபாடல்கள் பாடினர். இசைமணி மோகனும்பிகை கணேசனின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெற்றது.

ஃ ஃ ஃ

**வழக்கம்பரையில்**

"பாரதியார் சக்தியின் அருளைப் பெற்றவர். அதனால்தான் சக்தி வழிபாட்டுக்கு முதலிடம் கொடுத்துள்ளார்" என வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் நடாத்திய பாரதி நினைவு தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டிதர் க. மயில்வாகனம் குறிப்பிட்டார்கள். விழாவுக்கு மன்றத் தலைவர் திரு. சன். கந்தையா தலைமை வகித்தார்.

0 0 0

**கோப்பாயில்**

கோப்பாய், சனி

"இலகு தமிழ்க் கவிதைகளால் மக்களிடையே சுதந்திர சமத்துவ உணர்வைத் தூண்டி தமிழினத்தைத் தட்டியெழுப்பியவர் மகாகவி பாரதியார்" என கோப்பாய்வடக்கு சனசமூகநிலைய ஆதரவில் சித்திரவேலாயுத சுவாமி கோவில் முன்றலில் நடைபெற்ற பாரதிவிழாவில் உரைநிகழ்த்துகையில் ஆசிரியர் திரு. புதுமைலோலன் கூறினார்.

இவ்விழா திரு. க. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில், தற்போது மேற்கு நாடுகளிடையே நிலவும் இனவெறிக் கொள்கையைச் சிறிதளவாவது நீக்குவதற்கு பாரதியார் கவிதைகள் பல மொழிகளிலும் வெளிவருதல் அவசியம். நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் தமிழ்மொழியிலே செய்வதற்குத் திடசங்கற்பம் பூணவேண்டும். இதுவே நாம் பாரதிக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்" என்றார்.

செல்வி புஷ்பா செல்வநாயகம், ஆசிரியர் திரு. க. இ. குமாரசாமி, செல்வன் எஸ். பரமேஸ்வரன் ஆகியோரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

ஃ ஃ ஃ

**உனுப்பிட்டியில்**

வெள்ளவத்தை, சனி

"பாரதியார் தனது கவிதைகளிலே புதுமை செய்தார் என்று கூறினாலும் அவர் பழமையை மறக்கவில்லை. கண்ணன், கண்ணன்பாட்டு முதலிய பல கவிதைகள் நாயன்மார் காலத்தையும் இராமலிங்க சுவாமிகளின் பாடல்களையும் தழுவியவை என்றுதான் கூறவேண்டும். பாரதி பழமையை அடியாக வைத்துப் புதுமைக்கு வித்திட்ட புரட்சிப் பாவலன்" என உனுப்பிட்டி தமிழ் வளர்ச்சி மன்றம் நடாத்திய பாரதிவிழாவில் நெல்லை க. பேரன் பேசுகையில் கூறினார்.

திரு. வே. குமாரகுரு தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

செல்வி இரஞ்சினி நடராசா பேசுகையில் பாரதிக்குத் தமிழ்ப்பெண்கள் சமூகம் மிக்ககடமைப்பாடுடையது என்றார். செல்விகள் மாலதி கதிர்காமத்தம்பி, மதனி சுப்பிரமணியம் ஆகியோர் பாரதியாரின் பாடல்களை இனிமையுடன் இசைத்தனர். திருவாளர்கள் எம். சிங்கராஜன், எஸ். சிவபாதசுந்தரன் ஆகியோரும் பேசினர். திரு. வி. கந்தசாமி நன்றி கூறினார்.

**கரணவாயில்**

உடுப்பிட்டி, சனி

ஆதவன் இளைஞர் மன்றத்தினரின் 2-வது பாரதி விழா பண்டிதர் திரு. க. முருகேசு தலைமையில் கொண்டாடப்பட்டது.

திருவாளர்கள் சபா. செல்வநாயகம், பண்டிதர் வி. சரத்தாமன், சி. தங்கராசா, க. இராசதுரை, சி. க. நடராசன், இராமநாதன், க. இரத்தினசபாபதி, செல்வன் சி. மகாலிங்கம், செல்விகள் செல்வராணி செல்வநாயகம், சிவசோதி தங்கத்தம்பி ஆகியோர் உரைநிகழ்த்தினர். மேற்படி மன்றத்தாரின் இரு நாடகங்களும் விழாவில் இடம்பெற்றன.

**யாழ். மத்திய கல்லூரியில்**

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரித் தமிழ்மன்றத்தின் ஆதரவில் பாரதி விழா கொண்டாடப்பட்டது. திரு. ஷண்முக குமரேசன் தலைமைவகித்தார். வித்துவான் பொன். முத்துக்குமாரன் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். செல்வன் இளங்கோ பாரதி பாடல்களைப் பாடினார். செல்வி இராஜகுமாரன் நன்றியுரை கூறினார்.

மன்றத்தின் புதிய உத்தியோகஸ்தர் வருமாறு: தலைவர்: செல்வன் சுதந்திரராஜா, செயலாளர்: செல்வன் நகுலேசன், உதவிச் செயலாளர் செல்வன் சோதிலிங்கம், பொருளாளர்: ஞானேந்திரன், மாணவிகள் இருவர் உட்பட ஐவர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

---

### பாதுகாப்புச்சபை அங்குரார்ப்பணம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறைப் பகுதியின் முன்னேற்றம் கருதிபாதுகாப்புச் சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாதுகாவலர் திரு. எஸ். கார்த்திகேசு [ஊர்காவற்றுறை பொலிஸ் அதிபர்], தலைவர் திரு. எஸ். எம். அக்பிரம் உபதலைவர் திரு. க. கனகசபை, செயலாளர் திரு. க. சிவபாலன், தனாதிகாரி திரு. எம். மங்கராஸ். நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

---

### விவசாயக் கடன்

பட்டுக்கோட்டை, சனி

உணவு உற்பத்திக்கென நியமிக்கப்பட்ட மந்திரி சபை உபகுழு நெற்செய்கைக்கு விவசாயிகளுக்கு வழங்கும் நெற்செய்கைக் கடன்தொகையை ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 175 லிருந்து சென்ற ஆண்டு ரூ 225 ஆகவும் இவ்வாண்டு ரூ 262 ஆகவும் உயர்த்தியுள்ளது.

---

### மல்லாவி ஸ்ரீசுப்பிரமணியர் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மல்லாவி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவிலில் இன்று நண்பகல் மணவாளக்கோல அஷ்டோத்தர சதசங்காபிஷேகம் நடைபெறும். இரவு சுவாமி திருவுலா-வருதலும் [illegible] இடம்பெறும்.

# இரவில்தண்ணீர் அள்ளும்போது கிணற்றில் விழுந்தாராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வலிப்பினால் பல வருடகாலமாக அவஸ்தைப்பட்ட ஒருவர் தண்ணீர் அள்ளும் போது வலிப்பு ஏற்பட்டதால் கிணற்றுள் விழுந்து மரணமானார்.

இப்பரிதாப சம்பவம் யாழ்ப்பாண நகரில் நடைபெற்றது. மரணமான திரவியத்தின் (40) மரணம் பற்றி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினார். இரவு தண்ணீர் அள்ளும் போது வலிஏற்பட்டு கிணற்றுள் விழுந்ததாகவும், காலையில் பார்த்தபோது இறந்து கிடந்ததாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் சகோதரரான தம்பு, பொன்னம்பலம் தையல்மாஸ்டர் ஆகியோரும் சாட்சியமளித்தபின்னர் ஏற்புவலிப்பால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

(கா. நி.)

## ஆஸ்பத்திரிக்கு முன் கைகலப்பு

நல்லூர், சனி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவருக்கும் ஆஸ்பத்திரிக்கு முன்னால் தோடம்பழம் விற்பனைசெய்துகொண்டிருந்த அங்காடி வியாபாரி ஒருவருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பு ஆஸ்பத்திரிப் பொலிஸ் கான்ஸ்டபிள் திருகமலநாதன் தலையிட்டு நிறுத்தி வைத்தார். சண்டையிலீடுபட்ட இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நகரசபை காரியாலய இன்ஸ்பெக்டர் திரு மாணிக்கம் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து இப்போது ஆஸ்பத்திரிக்கு முன்னாலிருந்த அங்காடி வியாபாரிகள் அனைவரும் அகற்றப்பட்டுள்ளனர்.

# பனைப்பகுதி கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவி

### காரியாதிகாரி தெரிவித்த நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கூடிய விரைவில் பனைப் பகுதியிலுள்ள கைத்தொழில் பொருள்களை நல்ல முறையில் பயன் படுத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய உதவிகளை செய்யவிருக்கின்றது."

இவ்வாறு புத்தூர் கிழக்கு ஸ்ரீ குமரகுருபரன் மாதர் முன்னேற்றச் சங்க பொதுக் கூட்டத்தில் பேசும்போது காரியாதிகாரி திரு வி. கந்தப்பிள்ளை கூறினார்.

மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி செல்வி சி. லீலாவதி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை திரு எம். இராசரத்தினம், திரு கே. சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

தையல் நிலைய பயிற்சி நிலையமும் பனைவேலை பயிற்சி நிலையமும் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

[நநி

## ரூ. 6000 மோசடியாம்

அளவெட்டி, சனி

வடபகுதியிலுள்ள ஒரு கூட்டுறவு வைத்திய சாலையில் சுமார் 6000 ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் கணக்குப் பரிசோதனையின்போதே இந்த மோசடி பற்றித் தெரியவந்ததாகவும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக கூட்டுறவு ஆணையாளரும், மற்றும் அதிகாரிகளும் விசாரணை நடாத்தி வருகின்றனராம்.

### ஆயுர்வேதவைத்திய மாணவர் மன்றம்

அல்லைப்பிட்டி, சனி

யாழ் ஆயுள் வேதக்கல்லூரி மாணவர் மன்றக்கூட்டம் மேற்படி கல்லூரி மண்டபத்தில் என். மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. பண்டிதர் இ. திரமலைநாதன் செல்வன் சி. திருஞானதியாகேஸ்வரன், செல்வி எஸ். விஜயநாகி, டாக்டர் ஏ. வி. இராஜரத்தினம் ஆகியோர் உரையாற்றினர்.

# குடியேற்ற திட்டபிள்ளைகள் கல்வி பெறவாய்ப்பு குறைவு

உடுப்பிட்டி, சனி

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் குடியேற்றத்திட்டத்தின் அபிவிருத்தி, குறைபாடுகள் பற்றி ஆராயும் முகமாக மாவட்டக் காணி அதிகாரி தலைமையில் சுதந்திரபுரத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடியேற்றத்திட்ட உத்தியோகத்தரும், குடியேற்றவாசிகளும் கலந்துகொண்டனர்.

உடுப்பிட்டிக் கிராமசபையின் 10-ம் வட்டார உறுப்பினரும் 134-ம் இலக்க குடியேற்றவாசியுமான திரு. சி. ஸ்வரலிங்கப் பெருமாள் பேசுகையில், "இதுவரையிலும் குடியேற்றவாசிகள் சிலருக்கு வேலி அடைப்பதற்கு முட்கம்பி தரப்படவில்லை. இதனால் குளுமாடுகள் சேதம் ஏற்படுத்துகின்றன கிணறு, வீடு, ஆஸ்பத்திரி, பாடசாலை முதலிய வசதிகளும் செய்துதரப்படவில்லை. இவ்வித வசதிகள் உடனடியாகச் செய்யப்பட வேண்டியது அவசியம். இவ்வேளை பொதுமக்கள் குடியேற்றத்திட்டத்தில் குடியேறிக் கொள்ள வருகிறார்கள்" என்று கூறினார்.

"ஜீ. சி. ஈ. படிக்கும் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் குடியேற்றத் திட்டத்துக்குச்சென்றால் என்ன செய்வது. சாதாரண பிள்ளைகள் கூடக் கல்வி கற்பதற்குப் பாடசாலை இல்லாதது ஒரு பெரும் குறை. குடியேற்றவாசி ஒருவருக்கு பாம்பு கடித்தால் அல்லது சுகவீனமெனில் 12 மைல் தூரத்திலுள்ள சிகிச்சை நிலையத்திற்கே செல்ல வேண்டியுள்ளது. ஆதலால் இவற்றிற்கு உடன் பரிகாரம் காணவேண்டியது அவசியம் என்றும் அவர் அதிகாரிகளிடம் வற்புறுத்தினார்.

இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட குடியேற்ற[illegible] காரிகள் ஆவன செய்வதாக உறுதியளித்துச் சென்றுள்ளனர்.

# சிமெந்து விலை அதிகரிக்காது

### கூ: மொ. விற்பனவு ஸ்தாபன அதிபர் கருத்து

கொழும்பு, சனி

சிமெந்தின் விலை அதிகரிக்கமாட்டாது என கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத் தலைவர் திரு. சந்திரா விஜயசேகரா அறிவித்துள்ளார். இப்போது கையிருப்பில் 30,000தொன்சிமெந்து இருப்பதாகவும் மேலும் சிமெந்து இவ்வருட இறுதிக்குள் கையிருப்பில் வந்து சேருமென்றும் தெரிவித்துள்ள திரு. சந்திராவிஜயசேகரா பதுக்கல் காரர்களால் தான் தற்காலிக சிமெந்துத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

## 26-ம் திகதி பரீட்சை

ஊர்காவற்றுறை, வெள்ளி

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க ஆதரவில் நடத்தப்படும் 5-ம் வகுப்புப் பரீட்சை இவ்வாண்டு நவம்பர் மாதம் 26-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

## தீவுப்பகுதி தலைமைஆசிரியர்கள் சங்கக் கூட்டம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

தீவுப்பகுதித் தலைமையாசிரியர்களின் கூட்டம் ஒன்று புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

தீவுப் பகுதி கல்வி அதிகாரி திரு. எஸ். நல்லையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டன. பாடசாலைகளுக்கான விவசாய உபகரணங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968-69

# நெற் செய்கைப் போட்டிக்கு தகுதியுடையவர்கள்

வட்டுக்கோட்டை, சனி

விவசாயப் பகுதியினர் 1968-69-ம் ஆண்டிலும் நெற் செய்கைப் போட்டி நடத்தத் தீர்மானித்துள்ளனர். ஒவ்வொரு காரியாதிகாரிப் பிரிவிலும் மூன்று ரொக்கப் பரிசுகள் வழங்கப் படும். திறமையான விவசாயி முதலாவது பரிசாக ரூ. 750 ரொக்கப் பரிசாகப் பெறுவார். அவர் தங்கப் பதக்கப் பரிசைப் பெறுவதற்கு மாவட்ட ரீதியிலும் போட்டியிடலாம். சென்ற இரண்டாண்டுகளில் காரியாதிகாரிப் பிரிவில் பரிசு பெற்றவர்கள், இவ்வாண்டும் போட்டியில் 1-ம், 2-ம், 3-ம் பரிசுகளுக்கு போட்டியிட தகுதியற்றவர்கள்.

அரை ஏக்கருக்குக் குறைந்த நிலப்பரப்பில் நெற்செய்கை செய்பவர்களும் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது. எச்-4, எச்-7, எச்-8, எச்-105, எச்-501, பொடிவி எ.8, பிசி 16, முருங்கைக்காயன்-302, பச்சைப் பெருமாள், ஐ. ஆர்-8 ஆகிய இனநெல் பயிரிடுபவர்கள் மட்டுமே போட்டியில் கலந்து கொள்ள முடியும் போட்டியாளர் உரப்பசளை, களை கொல்லி, கிருமி, பங்கசு-புழு-பூச்சி கொல்லி போன்றவற்றை வாங்குதற்கு அத்தாட்சியாக சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

---



## யானை மார்க் சோடா மூடிப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு இன்னும் 20 பரிசுகள்!

CCS

அண்மையில் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள்;

250 ஜி. டபிள்யூ. சிறிசேன, 4/17. வனதாரோட், மகரகம.

251 எம். ஆ. வில்செண்ட் மகேலியா தடுப்பு இயக்கம். குருநாகல்.

252 பீ. லெனில் பெர்னாண்டோ, ஜெயந்தா பேக்கரி, நட்டொழுவ, சிலாவை.

253 எம். ஜீ. மணி, 71, சின்ஹபிட்டிய, கம்பளை.

254 சிறிசேன பாலசூரியா, 40, புறயற மாவத்தை, கொழும்பு 6.

255. குணபால தெனுவர. பொலிஸ் நிலையம், கருநாகலை.

256 ஆர். பி. ரப்பி எல் அம்பண, மிரிகம.

257 பரமானந்தசிவம் சரவணை கிழக்கு, வேலணை.

258 டபிள்யூ. எல். எம். சில்வா. 14/52 மெல்லிக் வத்த. மொறட்டுவை.

259 மொகமெட் லவ்ர். 14, விருவெட் வீதி, கொழும்பு 2.

260 டி. சிறிபால விதனேஜ், 235. தேசிய வீடமைப்புத் திட்டம் கொம்பிரொட்ட. வத்தளை.

261 செல்வன் ஜே. எம். எம். சபூர், 248/25. வொக்வெண்டால் வீதி. கொழும்பு 13.

262 திருமதி ஒல்கா பர்னாண்டஸ். ச 4. முதலாவது மாடி, அரசாங்க வீட்டுத் திட்டம், மஸ்பலப்பிட்டிய.

263 ஏ. ஏ. எம். காசிம். 453. பேராதனை வீதி, கண்டி.

264 எஸ். சிறிசேன, 1. களதபிட்டிய, அம்பாறை.

265 செல்வன். டுஸ்மியந்தபெரேரா. "சிறிசேவன", பிலபிட்டிய, களனி

266 கே. எம். ஏச். டி. சில்வா, 54, நுவகொட. பேருவளை.

267 கே. ஏச். பிரேமதாஸ. "ஹோட்டல் ஜனசெவ" கந்தளாய்.

268 யு. எல். அப்துல்காதர். அளுத்கடுவாவ. பொத்துவர

269 ஆர். டெல்சிக் பெர்னாண்டோ, 589, அர்ச் அந்தோனியார்ரோட். மொறட்டுவை.

270 எம். எச். எம். அப்துல் ஹமீட், 32. டி சொய்சாவீதி, கொம்பனித்தெரு.

271 எச். எம். பிரேம ரட்ண, 'லஷ்மி' கொறகபொல. பாணந்துறை.

272 எம் ஐ. எம். இசாடீன், 605. பேராதனைவீதி, கண்டி.

273 ஏ. ஜேகப். ஜானேந்திரம். கருவிக்ரோட், ஊர்காவற்றுறை.

274 திருமதி டி. வி. றாமெர 289. ஹைலெவல் ரோட், கிரிலபோன, கொழும்பு 6.

275 இ. பி. அத்தாவுக்க, 19, நுவரெலியா ரோட், கம்பளை

276 திருமதி. ஈ. சி. ஜே. பீரிஸ் 'கிங்-எஸ்ட்-ஏண்' பிறின்ஸ் ஒவ்வேல்ஸ் அவனியூ, மொறட்டுவ.

277 பி. ஏ. வீலாவதி, வெல்கம சந்தி, அத்துருகிரிய

278 ஆர். தணிகாசலம், 41, பாபர் வீதி, கொழும்பு

279 லெஸ்லி எவ். பெர்னான்டோ, 12 A. உஜன, மொறட்டுவ.

280 செல்வி ஹெமனி பொன்சேகா. 'மோஹன' சிலாவை.

281 திருமதி ராணி தசநாயக்கா, 21/1 சுகந்தான் தோட்டம், வ ர்ட் பிளேஸ், கொழும்பு-7

282 சுசந்தா வீரசிங்க 23, சேனநாயக்க அவனியூ, நாவல, ராஜகிரிய.

283 ஏ எச். விக்சைசிங்க இ.போ.ச. டிப்போ, மாத்தறை.

284 எம். ஜி. ரத்னாயக்க 'கசிசமாய' கோசல்லிலா, களனி.

285 செல்வன் எஸ். நந்தகுமார் 444/2 ஹாவ்லொக் ரோட், கொழும்பு 6.

286 திருமதி கே டி. குணசிலி, 820, வத்தசெடற ரோட், மகரகம.

287 எச். டி. ஆனந்தா, 75/2 கிரியல்லோவத்தை. தாவின்ன.

288 ஜி. டி. பியசேன, ரலக்கல, கிரிவத்துடுவ, ஹோமகம.

289 எம். ஐ. எம். முசின், 280, டாம்வீதி, கொழும்பு 12.

290 எம். செந்திவடிவேலு பிரசைகள் அலுவலகம், மயிலிட்டி, காங்கேசன்துறை.

291 டபிள்யூ. பீற்றர் சில்வா, அர்ச். சேவியர்ரோட், வென்னப்புவ.

292 ஏச் டபிள்யூ. நியூட்சன், 146, பிரதானவீதி, திருகோணமலை.

293 எஸ். செல்வராஜ். 32, சிவன் கோவில் மேலவீதி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

294 ஏனெஸ்ட் பெர்னாண்டோ, 171, மொறகஸ்முல்லா, ராஜகிரியா

295 செல்வி தயாவதி சமரதுங்க, 140, கெஸ்பெவ. பிலியந்தலை.

296 மஞ்சுரஞ்சன் ராஜசிங்கம். 604, அளுத்மாவத்தை ரோட். முகத்துவாரம்.

297 ஜேமிஸ் கல்பிடிக, கனிக சலூன், மடிறிகிரியா, ஹிங்குராக்கொட.

298 செல்வன் லஷ்மன் சஜபரு. டிஜக்க ஹா கொறட்டுவ, துடாவ, மாத்தறை.

299 எம். பி கணேஷ், 'மலர் வாசம்' வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

300 திருமதி பதிமா ஆர். வீரசிறி, நந்தா ஸ்ரோர்ஸ், வடுவ.

301 பி பி. திலகானந்தா, "சார்லஸ்மேரி" கொஸ்வத்த, பாணந்துறை.

302 ஏ. சிவராசம், 139/7 இன்கிரும்வீதி, கொம்பனித்தெரு.

303 ஏ விஜயசிங்க, 20/8, 19-வது ஒழுங்கை ஸ்ரேஸ் ரோட், கிராண்ட்பாஸ்.

304 ஆர். பி சிறிபால, றடவடுண்ண, பஸ்ஜால.

305 பி. ஏ. டபிள்யு. பெரேரா, 132/1, சிறிபொஞ்சி ரோட், கம்பளை.

306 எம். ஜே. மெண்டிஸ், 245, மலையரோட். உடகமுள, நுகேகொடை

307 பி. எல். பெர்னாண்டோ, 25/5, பதிமாவத்தை களுபோவில, தெகிவளை.

308 டபிள்யு. எம். பெரேரா, சித்றி ஸ்ரோர்ஸ், கொச்சிக்கடை, நீர்கொழும்பு.

309 டபிள்யு. நியூரன் லெஸ்லி டி. மெல், பி. டபிள்யு. டி., கண்டி.

310 செல்வன் செல்வி பூபாலன், 229, கிருளா ரோட், ஹவ்லொக் ரவுண்.

311 திருமதி லீலா எதிரிமன்ன, 'திஸிரா' கந்தனப்பிட்டிய. பே(B)சப். பாடுக்க.

312 எல். எல். பெரேரா, 32, பாகொட, நுகேகொட.

313 டபிள்யு. எவ். ஹொப்மன், 7/3, தேவாலய வீதி. கொகுவல.

314 திச பெரேரா, 86, முகாந்திரம்ரோட் கொழும்பு-3.

315 ஜி. எல். எம். பிரேமதாச, அளவைப் பகுதி, புரோசெஸ் கிளை, கிருளஸ் ரோட். கொழும்பு-5.

316 செல்வன் சமுத்திரராஜ் பத்மநாதன், 6, ராமகிருஷ்ண டெரஸ், கொழும்பு-6.

317 ஏ. ஏ. கமசேன, கெஸ்பெவ, பிலியந்தல.

318 நிமல் வீரசிங்க, 23, சேனநாயக அவனியு, நாவல ரோட், ராஜகிரிய.

319 எஸ். சிங்கராஜா, தாவடிகுளம், மிருசுவில்.

320 செல்வி சாரதா மல்லெகொடகம், "உப்சற," பிரிவென ரோட், மொறவெல்கமுவ.

321 செல்வி டபிள்யு. ஆர். ரணபுற, 105, காலகம வடக்கு, காலி.

322 எல். சி. ரணவீரா, பட்டினசபை அங்கத்தவர், சாந்தாண்டியா.

323 செல்வி ஒலிவிய ஜெயசூரியா, 106, நீர்கொழும்பு ரோட், கந்தானை.

324 ஏச். ஏ. ஜெயவர்த்தன 74, மரகும்பா வீதி, குருநாகல்.

325 கே. எம். ஹசான், 6. விமோடி குறுக்கு வீதி, நீர்கொழும்பு.

326 திருமதி பி. இ. தனவதி பெரேரா, 236/2, காலிவீதி, இரத்மலானை.

327 கே. ஏ. பேமசிறி, எல்பர்ட் சௌவரத்ன மோட்டோர்ஸ், கண்டி ரோட், பேலியகொடை.

328 செல்வன் மனோகரன் நடராசா, "கிமலஹிரி," பாக்கல் லேன், மானிப்பாய்.

முக்கியம்! எல்லாம் சரியான 350-வது பிரவேசம் பத்திரத்தை நாம் பெற்றதும், இந்தப் போட்டி முடிவடைவதுடன், அனுப்பப்பட்ட எல்லாப் பிரவேசங்களும் பற்றிய முடிவு எடுக்கப்பட ஆரம்பமாகும்......

... ... ... ... ... ... ... ... ... அதுவரை தொடர்ந்து சேமியுங்கள்.



## பென்ஷன் விரைவில் கிடைக்க நடவடிக்கை

கொழும்பு, சனி

ஸ்தலஸ்தாபன ஊழியர்கள் ஓய்வுபெற்றதும் அவர்களுக்கு உடன் பென்ஷன் கிடைக்கக்கூடியதாக ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரைக் கோரியுள்ளார்.

மொழிச்சட்டம் (தனிச் சிங்களச் சட்டம்) காரணமாக ஓய்வுபெற்ற சிலருக்கு நாளிதுவரை பலருக்கும் மேலாகியும் பென்ஷன் கிடைக்கவில்லையாம்.

## புதிய உறுப்பினர்

முத்தையன்கட்டு, சனி

முத்தையன் கட்டு வலது கரை 1-ம் படிவ குடியேற்றவாசிகள் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இம்மாதம் 9-ம் திகதி கூட்டுறவுப் பரிசோதகர் திரு. வ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகசபை அங்கத்தவராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். மகாதேவன், உப தலைவர்: த. நல்லதம்பி, காரியதரிசி: இ. தெய்வேந்திரம், தனாதிகாரி: சி. முருகுப்பிள்ளை.

6 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

* * *

ஊர்காவற்றுறை, வெள்ளி

வேலணை ஐயனார் மீன்பிடித் தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் ஆண்டுக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. பின் வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. கார்த்திகேசு, காரியதரிசி: திரு இ. மயில்வாகனம், தனாதிகாரி: திரு. த. இராசலிங்கம். நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## அரிசிப் புத்தகத்தின் கதி என்ன

பூநகரி, சனி

விவசாயப்படை முகாமில் இருந்து ராஜினாமாச்செய்து விட்டு வெளியேறிய பூநகரி கிளிநொச்சியைச் சேர்ந்த அனேக இளைஞர் தங்கள் அரிசிப்புத்தகங்களின் கதி என்ன என்று ஏங்குகின்றார்கள். முகாமில்இருந்து வெளிவரும்போது கூப்பன் அனுப்புவதாகக்கூறி இப்போ நாலு, ஐந்து மாதங்களாகியும் கூப்பன் அனுப்பப்படவில்லையாம். இது பற்றி கடிதங்கள் அனுப்பியும் எதுவித பதிலும் இல்லையென்று கூறப்படுகின்றது.

## 23 அடிகள் வெட்டியபின் தண்ணீர்

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவு மத்தி கிராம முன்னேற்றச் சங்கத்தால் வெட்டப்பட்ட கிணறு ஒன்று 23 அடிகள் வெட்டப்பட்டபின்னரே தண்ணீரைக் காணமுடிந்தது. பொதுவாக 7 அல்லது 8 அடி வெட்டியதும் தண்ணீர்வரும் நெடுந்தீவில் 23 அடிவரை விடாமுயற்சியோடு வெட்டி தண்ணீர் கண்ட சம்பவம் ஆச்சரியத்தையூட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தரங்க காரியதரிசி அவசர அவசரமாக நியூயோர்க்குடன் தொடர்பு

# அண்ணாவுக்கு அறுவைச் சிகிச்சை நடந்ததா?

## திடீர் திருப்பம்

அரசியல் நிலைமைபற்றியும், யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் பற்றியும் மற்றும் இதர பிரச்னைகள் பற்றியும் ஆராய்வதற்காக வழமை போல் தமிழரசுக்கட்சியின் செயற்குழுவும் பொதுச் சபையும் நேற்றும் நேற்று முன்தினமும் கூட்டப்பட்டிருந்தது. ஆனால் செயற்குழு, பொதுச்சபைக் கூட்டங்கள் எதிர்பாராதவிதத்தில் இந்த முக்கிய, பெரிய முடிவுகளைச் செய்யவேண்டி நேர்ந்துவிட்டது. நேற்று முன்தினம் பிற்பகலில் நடந்த செயற்குழுக் கூட்டத்திலும் நேற்று நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்திலும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றதுடன் சிலர் கண்ணீரும் சொரிந்தனர். கட்சியின் தலைமைப் பீடத்தின் மீது உறுப்பினர் பலர் சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்குப் பொதுச்செயலாளர் விளக்கமாகவும் விபரமாகவும் பதிலளித்தார். கட்சியின் வளர்ச்சி பற்றியும் அதை உருவாக்குவதில் ஈடுபட்டு உழைத்தவர்கள் பற்றியும் அவர்கள் செய்த தியாகங்கள் பற்றியும் ஆதியோடந்தமாக எடுத்துக்கூறிய திரு. அமிர்தலிங்கம் இதுவரை கட்சி சாதித்த சாதனைகளையும், தமிழினத்தின் உரிமைகளுக்காக அது போராடி, ஈட்டிய நன்மைகளையும் எடுத்துக்கூறியதாகவும், இதன் பின் கட்சிக்கு ஏற்பட்ட வீழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டதாகவும் தெரியவருகிறது.

## திருமலைப் பிரச்னை உச்சம்

திருக்கோணமலைத் துறைமுகத்தைத் தேசியமயமாக்குவதற்குத் தமிழரசுக்கட்சியினரைக் கலந்தாலோசனை செய்த பின்னரே முடிவு செய்வதாகப் பிரதமர் தெரிவித்திருந்தபோதிலும், தமிழரசுக்கட்சியினருக்கு அறிவிக்காமலே திருமலைத்துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டபோது அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேற வேண்டுமெனக் கட்சியின் செயற்குழுவிலும் பொதுச்சபையிலும் பெரும் வாக்குவாதங்கள் நடந்தன. அந்தக் கூட்டங்கள் நடந்தபோது கட்சிக்காரியாலய வாசலில் சிலர் அமர்ந்திருந்து ஆட்சேபமும் தெரிவித்தனர். அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதில்லையென்றும் பிரதமர்மீது நம்பிக்கை தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவருவதற்குக் கால அவகாசமும் கொடுக்கப்பட்டது. மாவட்டசபை மசோதாவை இப்போது கொண்டுவருவதில்லையெனப் பிரதமர் அறிவித்தபோதும் தமிழரசுக் கட்சிக்குள் அரசாங்கத்தைவிட்டு வெளியேறவேண்டும் என்ற குரலெழுந்தது. எனினும் எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பளிக்கக்கூடாதென்பதற்காக வெளியேறுவதில்லையெனத் தமிழரசுத் தலைமைப்பீடம் முடிவுசெய்திருந்தது. ஆனால் திருக்கோணேசராலயப் பகுதியை புனித இடமாகப்பிரகடனப்படுத்துவது பற்றி ஆராய்வதற்கு உள்ளூராட்சி அமைச்சர் நியமித்த விசாரணைக் கமிஷனின் நடவடிக்கைகளை ஒரு பௌத்த பிக்கு தெரிவித்த எதிர்ப்புக்காக, பிரதமர் நிறுத்திவைத்ததைக் கண்டு 'இனி வேறு வழியில்லை' என்ற முடிவுக்குத் தமிழரசுக்கட்சித் தலைவர்களும் கடைவந்ததுதான் மந்திரிப்பதவியிலிருந்து திரு. திருச்செல்வம் விலகுவதென்றும், அரசாங்கத்திலிருந்து வெளியேறி தனியாக இயங்குவதென்றும் செய்யப்பட்ட முடிவாகும்.

## பிரதமருக்கு எழுதியகடிதம்

கோணேசராலயப் பகுதியை புனிதஇடமாகப் பிரகடனப்படுத்துவது பற்றி ஆராய தாம் நியமித்த விசாரணைக் கமிஷனின் நடவடிக்கைகளை தம்மைக் கொண்டே நிறுத்திவைத்த பிரதமரின் செயலைக்கண்டு கவலையடைந்த அமைச்சர் திருச்செல்வம், அமைச்சர் பதவியைத் துறப்பதற்கு தமக்கு அனுமதியளிக்குமாறு கோரி திரு. செல்வநாயகத்திற்கு அன்றே கடிதம் அனுப்பியிருந்தாராம். இக்கடிதத்தின் பின்னரே திரு. செல்வநாயகம் மிகக் கடுமையான தொனியில் ஓர் ஆட்சேபக் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பிவைத்திருந்தார். (இந்தக்கடிதம்பற்றிய செய்தியும் அதன் சாரமும் 'ஈழநாடு' பத்திரிகையில் மட்டும் வெளிவந்திருந்தது.)





"நாங்கள் அரசாங்கம் அமைக்க உதவியளித்து ஒத்துழைப்புகளை கொடுத்து வந்த எங்களுக்கு ஏமாற்றம் தான் கிடைத்த பங்கு. இனியும் உங்களை நம்பி நாம் பொறுமையுடனிருப்பதா?" என்ற தொனியில் திரு. செல்வநாயகம் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டிருந்ததாகத் தெரிகிறது.

## உப உணவுத் தேவையை வடமாகாணம் பூர்த்திசெய்யும்

### யாழ். அரசாங்க அதிபர் நம்பிக்கை

யாழ்ப்பாணம்; ஞாயிறு "உப உணவுப்பொருள் தேவையை நிவர்த்தி செய்வதில் வடமாகாணம் முன்நிற்கின்றது. இலங்கைக்குத் தேவையான உணவுப்பொருட்களை 70-ம் ஆண்டு முடிவடைவதற்கிடையில் உற்பத்தியாகிவிடும் என்பது இப்பொழுதிலிருந்தே தெரிவருகின்றது"

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட விவசாய மன்னருக்கான பரிசளிப்பு விழாவிற்கு தலைமை வகித்துப் பேசும்போது அரசாங்க அதிபர் வேணன் அபயசேகரா கூறினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் திரு. வேணன் அபயசேகரா தொடர்ந்து பேசுகையில் ஆரம்பத்தில் உருளைக்கிழங்கு 5 ஏக்கரில் மட்டும் செய்கை பண்ணப்பட்டது. இப்போது 95 ஏக்கரில் உருளைக்கிழங்கு விளைவிக்கத்திட்டம் தீட்டப்பட்டுள்ளதென்றால் விவசாயிகள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றார்கள் என்பதைப் போற்ற வேண்டும் என்றார்.

விவசாயிகள் முன்னின்று உழைத்தால், இலங்கை 10 வருடத்திற்குள் வெளிநாட்டுக்கு உணவுப்பொருட்களை ஏற்றும் என்பதில் ஐயமில்லை. போட்டிகள் நடாத்தி மக்களை உற்சாகப்படுத்துவோம் என்பது விவசாயப்போட்டியிலிருந்து தெரிகின்றது என்றும் கூறினார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சுவாரத்தினம் பேசுகையில், விவசாயிகள் விஞ்ஞான முறைகளைக் கையாண்டு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். எமது நாட்டிலுள்ளவர்கள் விவசாயத்தில் முன்னேறி மற்றைய நாட்டவர்களுக்கு வழிகாட்டியாக விருக்கவேண்டுமென்று கூறினார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகேசம்பிள்ளை பேசுகையில், 1970-ம் ஆண்டுக்கிடையில் போதிய நெல்லு விடயத்தில் பூரண தன்னிறைவு பெறுவோம். இலங்கையிலுள்ள நெல்லுக் களஞ்சியங்கள் எல்லாம் 1970-ம் ஆண்டு நிரம்ப வேண்டும். மிகுதியாக விருக்கும் நெல்லை வெளிநாட்டுக்கு ஏற்றக்கூடிய அளவுக்கு நாம் தயாராகஇருக்கவேண்டும் என்று கூறினார்.

மாவட்ட விவசாய மன்னர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு திருமதி வேணன் அபயசேகரா பரிசில்கள் வழங்கினார். திரு. எஸ். சபாரத்தினமும் உரையாற்றினார். (ந. நி)

## பரிசோதனையினால் ஏற்பட்ட மயக்கம்

சென்னை, செப். 14 நியூயோர்க்கில் தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை சிகிச்சை பெறும் மெமோறியல் மருத்துவ மனையுடன் இன்று அவசரமவசரமாக அண்ணாவின் அந்தரங்கக் காரியதரிசியும் சென்னை நரம்பு வைத்திய நிபுணர் டாக்டர் திரு. ராமமூர்த்தியும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டனர்.

அண்ணாவுக்கு நேற்று அறுவைச்சிகிச்சை செய்துவிட்டதாக பரவிய வதந்தியொன்றைத் தொடர்ந்தே இவர்கள் உண்மை நிலையை அறிய தொடர்பு கொண்டனர்.

முதலில் குறிப்பிட்டபடி 16-ம் திகதி திங்கட்கிழமையே அண்ணாவுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படவிருப்பதாக அண்ணாவைக் கவனித்துவரும் நியூயோர்க் மெமோறியல் வைத்திய நிபுணர் டாக்டர் மிலலர் போனில் அண்ணாவின் அந்தரங்க காரியதரிசியிடம் தெரிவித்தார்.

### டாக்டர் மிலலர் நம்பிக்கை

சதை வளர்ச்சி அண்ணாவின் ஆகாரக் குழாயை மட்டும் பாதித்திருப்பதால் அறுவைச் சிகிச்சைவெற்றிகரமாக நடந்து முடியுமென டாக்டர் மிலலர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று அண்ணாவின் ஆகாரக் குழாயில் 'எண்டஸ்கோப்' பரிசோதனையை டாக்டர் மிலலர் நடத்திய போது அண்ணா சிறிது நேரம் மயக்கமுற்றுக்கிடந்ததாகவும் இப்போது அண்ணா மகிழ்ச்சியாக இருப்பதாகவும், நிம்மதியாகத் தூங்குவதாகவும் இன்று பிற்பகல் 8 மணிக்கு தமிழக பொதுப்பணி அமைச்சருக்கு அண்ணாவுடன் நியூயோர்க்குக்கு கூடச்சென்ற பார்லிமெண்ட் தி. மு. க. அங்கத்தவர்களான திரு. செழியனும் திரு. ராஜாராமும் போனில் தெரிவித்தனர்.

### "துணைவியார் கூட இருந்தார்"

இன்று முழுவதும் அண்ணாவின் துணைவியார் திருமதி ராணி அண்ணாவுக்கு பக்கத்திலிருந்தார். அண்ணாவின் வளர்ப்பு மகன் திரு. பரிமளமும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களான செழியனும், ராஜாராமும் சிறிதளவு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

### தேசாய் சந்திப்பார்

இந்திய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இம்மாதம் 27-ம் திகதி நியூயோர்க் மெமோறியல் மருத்துவமனையில் அண்ணாவைச் சந்திப்பார். இன்று திரு. தேசாய் இத்தகவலை வெளியிட்டார்.

## இலட்சிய நடிகர் வருகை

யாழ்ப்பாணம், ஞாயிறு புத்தூர் மத்தியஜனசமூக நிலையத்தின் வெள்ளிவிழாவில் கலந்து கொள்வதற்கென்றே இலட்சிய நடிகர் திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் யாழ்ப்பாணம் வருகிறார். 21-ம் திகதி நடைபெறும் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபின் மறுநாளே சென்னை திரும்புகிறார். இலங்கையிலே வேறெவ்வித நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள மாட்டாரென்று வெள்ளிவிழா அமைப்புக்குழு செயலாளர் திரு. ந. திலகசிற்றம்பலம் எழுதுகின்றார்.

## றிமாண்டில் வைக்க உத்தரவு

வல்வெட்டித்துறை, சனி அல்வாய் தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம், சின்னையா நடராசா ஆகிய இருவரும் இம்மாதம் 11 திகதி இரவு வதிரியைச் சேர்ந்த ஆள்வார் கணபதிப்பிள்ளைக்குச் சொந்தமான மாடு ஒன்றைக் களவாடியதாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. சின்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரிகள் இருவரையும் இம்மாதம் 20 திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

## வாலிபர் பிணையில் சென்றார்

வல்வெட்டித்துறை, சனி கம்பர்மலையைச் சேர்ந்த வி. லக்ஷ்மிகாந்தன் என்னும் வாலிபர் இவ்வருடம் நடைபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் உற்சவத்தின் போது கோவிலடியில் வைத்து யுவதியொருவரிடம் பலாத்காரம் செய்ய எத்தனித்ததாக பொலிஸ் உத்தியோகஸ்தர் திரு. வி. சனாதிப்பிள்ளையினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. சின்னராசா முன்னிலையில் ஆஜர்செய்தபோது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 500 பிணையில் செல்லுமாறும் மீண்டும் அடுத்த மாதம் 10-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## தடுப்பு முகாம் நிரந்தரமாகும்

யாழ்ப்பாணம், சனி தற்போது ஆனையிறவில் அமைந்திருக்கும் தற்காலிக பொலிஸ் தடுப்பு முகாம், நிரந்தர பொலிஸ் தடுப்பு முகாமாகலாம். யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆனையிறவுக்கும் விஜயஞ்செய்து இதுசம்பந்தமாகப் பரிசீலனைசெய்ய விருப்பதாகத் தெரியவருகிறது. (ந. நி)

## கடும்வரட்சி

முல்லைத்தீவு, சனி முல்லைத்தீவில் சென்ற எட்டு மாதங்களுக்கு மேலாக மழை பெய்யாததால் குளம் குட்டைகள் யாவும் வற்றி விட்டன. கிணறுகளில் மண்டித் தண்ணீர்தான் காணப்படுகின்றது. கால்நடைகள் ஒருபுறமும் வீட்டுக் கிணறுகள் இல்லாதோர் ஒருபுறமும் தண்ணீரின்றிக் கஷ்டப்படுகின்றனர். வயல்கள் யாவும் வரண்டு காட்சியளிக்கின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org